

# கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்....



த. செல்வின் சரோன்மணி

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். II நாளா 7: 14

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ் பாளையங்கோட்டை — H. 910



Miss மோனிஷா

# இதய பூர்வமான நன்றி !!

1988ம் ஆண்டு மே மாதம் நாகர்கோவிலில் நடைபெற்ற வருடாந்திர சுவிசேஷ ஐக்கிய நண்பன் கூட்டத்தில் இறுதிச் செய்தி கொடுத்து முடித்ததும் குலசேகரத்தில் எஸ்டேட் மானேஜராக பணிபுரியும் திரு. எட்வின் S அலெக்ஸான்டர் அவர்கள் தங்கள் வீட்டிற்கு ஜெபிக்கும்படி அழைத்தார்கள். அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் போது அவர்களுடைய ஆத்தும பாரத்தையும் ஊழிய வாஞ்சைகளையும் அறிந்து என் உள்ளம் மகிழ்ந்தது என் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். ஜெபித்து முடித்தபின் II Year B.Sc. Computer Science படித்துக் கொண்டிருக்கும் அவர்களது அன்பு மகள் மோனிஷா தன் கையில் போட்டிருந்த தங்க வளையலை கழற்றி உங்கள் ஊழியங்களுக்கு இதை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கொடுத்தாள். எவ்வளவோ வேண்டாம் என்று மறுத்துக்கூறியும் திரு. எட்வின் அலெக்ஸான்டர் அவர்களும் அவர்கள் துணைவியார் திருமதி மார்கிரட் அலெக்ஸான்டர் அவர்களும் அதிகம் வற்புறுத்தியதின் பேரில் அந்த வளையலிருந்து வரும் பணம் "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்" ... ... என்ற புத்தகம் வெளியிடவும் அதிலிருந்து வரும் வருமானம் மருத்துவமனையில் கேட்பார் இன்றி அநாதைகளைப் போல கிடக்கும் நோயாளிகளுக்கு பயன்படுத்துவது என்றும் முடிவுசெய்யப்பட்டது. எனவே இப்புத்தகத்தை வெளியிட எனக்கு உதவி செய்த திரு. & திருமதி எட்வின் S. அலெக்சான்டர் அவர்களுக்கும் அவர்களது அன்பு மகள் மோனிஷாவுக்கும் இயேசு பெருமானின் இன்ப நாமத்தில் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன். கர்த்தர் தாமே இக்குடும்பத்தை மென்மேலும் ஆசீர்வதித்து அவர் நாம மகிமைக்காக பயன்படுத்துவாராக. நீங்கள் அனைவரும் இக்குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**S. செல்வின் சிரோமணி**

கிறிஸ்துவுக்குள்

பிரியமானவர்களே



இறை மைந்தன் இயேசு இரட்சகரின் இன்ப நாமத்தில் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். நான் ஊழியத்தின் பொருட்டு பற்பல இடங்களுக்குச் செல்லும் போது அநேக வாலிப சகோதர, சகோதரிகளும் தாய்மார்களும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலுமுள்ள பிரச்சனை களையும் கண்ணீரோடு சொல்லி ஜெபிக்கச் சொல்வதுண்டு. இ பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் ஒரு புத்தகம் வெளியி வேண்டும் என்ற எண்ணம் சில ஆண்டுகளாக என் உள்ளத்தி இருந்து வந்தது. பொருளாதார வசதி இல்லாதபடியினா தொடர்ந்து ஜெபித்து வந்தேன். ஜெபத்திற்குப் பதில் தரும் எ தேவன் என் அன்பு மருமகள் ஜோஷியா மூலம் இப்புத்தகத்தை வெளியிட அருள்புரிந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவருக்கே துதியும் கனமும் உண்டாவதாக. இப்புத்தகத்திலுள்ள சில தே பிள்ளைகளின் வாழ்க்கையில், குடும்பங்களில் காணப்படும் உயர்ந் பண்புகள் நம் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாக அமையும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறே இப்புத்தகத்திலிருந்து வரும் வருமானம் மருத்துவமனை ஊழிய திற்கென்று பயன்படுத்தப்படும். இதைத் தொடர்ந்து சில மி னெரிமார்களின் வாழ்க்கைச் சரித்திரமும் கிறிஸ்தவர்கள் தங்க பரிசுத்த வாழ்க்கையில் வளர, நிலைத்துநிற்க கடைப்பிடிக் வேண்டிய வழிகளைக் குறித்த புத்தகங்களும் வெளியிட ஜெபித் ஆயத்தப்பட்டு வருகிறேன். இவ்வாஞ்சை நிறைவேற, இந் தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த் தாமே தங்களையும் தங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதித்து அ நாம மகிமைக்காக பயன்படுத்துவாராக.

S. செல்வின் சிரேகம

## முகவுரை :-



நான் பண்டாரஞ் செட்டிவிளை மேரி அன் பெஸ்ட் பெண்கள்மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரியும் போது தம்பி செல்வின், என் அக்கா எபன் சந்தோஷ ராஜ் அவர்கள் வீட்டில் தங்கி படித்துக் கொண் டிருந்தார். படிப்பில் தோல்வியுற்று மனம் நொந்து வாழ்க்கையில் இறுதி கட்டத்தை நோக்கிச் சென்று கொண் டிருக்கும் போது தேவன் தம்பியை சந்திக்க உதவி செய்தார். ஆறுதல் கூறி தேற்ற சத்தியத்தை சரியான முறையில் அறிந்து கொள்ள உதவிசெய்ய எனக்கு தேவன் கிருபை செய்தார். தம்பி தன் வாழ்க்கையில் படிப்படியாக கிறிஸ்துவுக்குள் வளர்ந்த தையும், ஊழிய ஆர்வம் உள்ளவராக இருப்பதையும் கண்டு மகிழ்ந்தேன். தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். இன்று தன் ஆசிரியப்பணியையும் விட்டுவிட்டு தேவ நாம மகிமைக்காக இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் சென்று ஊழியம் செய்து வருவதைப்பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். தம்பி வெளியிட்டுள்ள "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்" என்ற புத்தகம் அநேக வாலிபர், வாலிபப் பெண்களின் தனிப்பட்ட வாழ்வை கிறிஸ்துவுக்குள் கட்டவும் அநேக குடும்பங்கள் கிறிஸ்துவுக்குள் சிறந்த குடும்பங்களாகக் கட்டப்படவும் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் கட்டும் மக்களாக, குடும்பங்களாக உருவாக்கவும் பயன்படும் என்று விசுவாசிக்கிறேன். வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் இப்புத்தகம் ஆசீர்வாதமாக அமைய ஜெபிக்கிறேன். தம்பியின் பணி தேவ நாம மகிமைக்காகத் தொடர வாஞ்சிக்கிறேன்.

குளோரி தாமஸ்

Rtd. தலைமை ஆசிரியை,

சாராதக்கர் மேல்நிலைப்பள்ளி,

பாளையங்கோட்டை

## எமது வெளியீடுகள்

1 வேஷம் ஒருநாள் கலையாதோ?

2 இன்றைய உலகில் இதுவும் பாவமா?

3 கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் . . .

## ஆசிரிய பிரதிகள்

1 நித்திய சமாதானம்

2 மது அருந்துவது தவறு?

3 உல்லாச உலகம்?

4 பயப்படாதே, கலங்காதே . . . நான் உன்னோடு

5 உன்வாழ்வில் அற்புதம் நடைபெற வேண்டுமா?

6 கானல் நீர்

S. செல்வின் சிநேகமணி
9, சிவந்தி பட்டி ரோடு
மகாராஜா நகர்
திருநெல்வேலி-627011

நண்பா

# உன் அஸ்திபாரம் எங்கே?

இன்றைய உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன் குடும்பத்தையும் தன் வாழ்க்கையையும் மகிழ்ச்சியுடன் அமைக்க முயற்சிக்கின்றான். தன் அறிவு, ஆற்றல், செல்வம் மற்றும் எல்லாவற்றையும் பயன்படுத்திப்பார்க்கிறான். இறுதியில் தோல்வியைத்தான் காண்கிறான். மனிதனுடைய வாழ்க்கை செம்மையாக அமைய வேண்டுமானால் மனிதசக்தியிலும் மேலான ஒரு சக்தி செயல்பட வேண்டும். அச்சக்திதான் இம் மனிதனையும், இவ்வுலகத்தையும் படைத்து ஆளும் இறைசக்தி. இத்துணையின்றி வெற்றியுள்ள வாழ்வு அமைவது கடினமே.

வேதத்தின் அடிப்படையில் நாம் தியானிக்கும்போது இஸ்ரவேல் கோத்திரத்தின் இரண்டாவது அரசனாகிய தாவீதின் மைந்தனாகிய சாலொமோன் அரசன் தன் வாழ்க்கை முழுவதையும் அலசி, ஆராய்ந்து பார்த்து கூறும் வார்த்தைதான். 'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா''. இறைவன் இல்லாத வாழ்க்கை அல்லது இறைவன் இல்லாத குடும்பம், நிறைவு பெறாத வாழ்வு, அல்லது நிறைவு பெறாத குடும்பம் என்கிறார்.

## இந்த சாலொமோன் யார்?

இவர் இஸ்ரவேலின் இரண்டாவது அரசனாகிய தாவீது அரசனின் மைந்தன். உரியாவின் மனைவியாகிய பத்சேபாளுக்கு மகனாய் பிறந்தவன். தேவன் வாசம் பண்ண எருசலேம் நகரத்தில் மகிமை பொருந்திய முதல் ஆலயத்தைக் கட்டியவன். தேவ தரிசனம் பெற்ற மனிதன். தேவன் அவனது தரிசனத்தில் தோன்றி. '' நீ விரும்புவதைக் கேள்'' என்று கூறியபோது சாலொமோன்,

பொன்னேயும்; பொருளேயும் கேட்காமல் நீர் தந்த உமது ஜனத்தை நியாயம் விசாரிக்க ஞானத்தைத் தாரும்'' என்று கேட்கிறுன். அவன் உத்தம இருதயத்தைக்கண்ட தேவன் அவனுக்கு விசேஷித்த ஞானத்தையும் உணர்வுள்ள இருதயத்தையும் ஐசுவரியத்தையும் மகிமையையும் அவனுக்குக் கொடுத்தார். வேதத்தின் பிறப்பகுதிகளே ஆராய்ந்து பார்க்கும்போது சாலொமோனேப்போல இவ்வுலகில் சிறந்த ஞானி இருந்ததும் இல்லே, இருக்கிறதுமில்லே, இனி இருக்கப் போவதும் இல்லே என்டதையும், இவனேப்போல சிறந்த ஐசுவரியவான் இந்த உலகத்தில் வாழ்ந்ததும் இல்லே, இனி வாழப் போவதுமில்லே என்பதையும் நாம் தெளிவாக புரிந்து கொள்ளலாம். இன்னும் கூறப் போனுல் இவன் ஆட்சி புரிந்த நாட்களில் தேசமெங்கும் சமாதானம் நிலவியது என்பதையும் வேதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு சகல அந்தஸ்துகளேயும், விசேஷித்த ஞானத்தையும் ஐசுவரியத்தையும், சமாதான வாழ்வையும் பெற்ற மாபெரும் அரசன், ஞானி, தன் வாழ்க்கை முழுவதையும் அலசிப்பார்த்து கூறுகின்ற வார்த்தைதான் ''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா'' இறைவன் இல்லாத வாழ்க்கை, குடும்பம், அர்த்தமற்ற வாழ்க்கை, குடும்பம், அது இருள்மயமான வாழ்க்கை, குடும்பம், சூனியமயமான வாழ்க்கை குடும்பம் என்பதை அறிந்திருக்கிறேன்; அவர் இல்லாமல் என்னுல் ஒரு சனப்பொழுது கூட வாழ முடியாது. அவர் இல்லாமல் என் குடும்பத்தை ஒருநாள்கூட நடத்த முடியாது. அவரே என் வாழ்க்கைக்கும், என் குடும்பத்திற்கும் என் சமுதாய வாழ்க்கைக்கும், ஆதாரம், ஒப்பற்றத் தலேவர் என்று பகிரங்கமாக அறிக்கையிடுகிறுர். நீ இவ்வாறு கூறமுடியுமா? உன் தனிப்பட்ட வாழ்க்கைக்கு, உன் குடும்ப வாழ்க்கைக்கு, உன் சமுதாய வாழ்க்கைக்கு ஆதாரம், யார்? தலேவர் யார்? இறைவனு? சுயமா?

**கட்டடம் கட்டிடும் சிற்பிகள்.**

இரண்டுபேர் விடு கட்ட துவங்கினர். ஒருவன் மணலின் மீது வீடு கட்டுகிறுன், இவன் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில்' உழைப்பின்றி சுலபத்தில் அழகான வீட்டை கட்டி முடிக்கிறுன். இன்னெருவன் கற்பாறையின் மீது வீடு

கட்டுகிறான். இவன் அதிக நேரம் செலவு செய்கிறான். அதிக பணம் செலவு செய்கிறான். அதிக உழைப்பையும் பயன்படுத்தி கரடுமுரடான ஒரு வீட்டைக் கட்டி முடிக்கின்றான். மணலின் மீது வீடு கட்டியவன் கற்பாறையின் மீது வீடு கட்டியவனைப் பார்த்து சிரிக்கின்றான். “நீ அதிக நேரத்தை செலவு செய்தாய், அதிக பணத்தை செலவு செய்தாய். அதிக உழைப்பையும் பயன்படுத்தி கரடுமுரடான ஒரு வீட்டைத்தானே கட்டியிருக்கிறாய். என்னைப் பார்த்தாயா? நான் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், குறைந்த உழைப்பில் அழகான வீடு கட்டியிருக்கிறேன்” என்று சிரித்தான். இதே போன்றுதான் இன்றைய உலகில், உலகத்தின் மீது அஸ்திபாரம் போட்டு, பாவ வழியில், குறுக்கு வழியில் (பொய், திருட்டு, ஏமாற்று, லஞ்சம்) குறுகிய காலத்தில், குறைந்த உழைப்பில் தங்கள் குடும்பத்தை பலர் மதிக்க புகழ்ந்து கூற, செல்வ செருக்குடன் அமைத்துக் கொள்ளுகின்றனர். இவர்கள் இறைவன் மீது தன் அஸ்திபாரத்தைப் போட்டு துன்பத்தின் மத்தியில் வாழ்க்கை கட்டிவரும் தேவனுடைய மக்களைப் பார்த்து சிரிக்கின்றனர். என்னை பார்த்தாயா? நான் கொஞ்சம்தான் படித்திருக்கிறேன். சிறு வேலைதான் செய்கிறேன், கொஞ்சம் தான் சம்பளம் வாங்குகிறேன். ஆனால் குறுகிய காலத்தில் நல்ல வீடு கட்டியிருக்கிறேன். தோட்டம், துரவும் வாங்கியிருக்கிறேன். பணம் கொடுத்து கல்லூரியில் இடம் வாங்கி படிக்க வைக்கிறேன். நிறைய ரொக்கம் நகை கொடுத்து நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து சீரும் சிறப்புமாக வாழ்கிறேன். நீயோ அதிகம் படித்திருக்கிறாய் உயர்ந்த உத்தியோகம் பார்க்கிறாய், அதிகம் சம்பளம் வாங்குகிறாய். உனக்கு ஒரு வீடு கட்ட முடியவில்லையா? ஒரு தோட்டம், துரவு வாங்க முடியவில்லையா? உன் பிள்ளைக்கு பணம் கொடுத்து ஒரு உயர்ந்த கல்லூரியில் இடம் வாங்க முடியவில்லையா? நிறைய பணம், நகை கொடுத்து நல்ல இடத்தில் உன் மகளை திருமணம் செய்து கொடுக்க முடியவில்லையா? நீ இந்த உலகத்தில் வாழத் தெரியாதவன், பிழைக்கத் தெரியாதவன். இந்த உலகத்தை அனுபவிக்கத் தெரியாதவன் என்று உலகத்தில் அஸ்திபாரம் போட்டு வாழ்பவன் இறைவன் மீது அஸ்திபாரம் போட்டு வாழ்பவனைப் பார்த்து சிரிக்கிறான்.

நண்பனே உன் அஸ்திபாரம் எங்கே? ஞானக் கன்மலையாகிய கிறிஸ்துவா? அப்படியானால் எத்தனைக் கஷ்டங்கள், துன்பங்கள் அவமானங்கள், நிந்தைகள் பழிச்சொற்கள் இறப்புகள் வந்தாலும்

உன் இதயம் கலங்காது, உன் வாழ்க்கை நடம் புரளாது. ஆனல் இந்த மாயையான பாவ உலகம், கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, உலகத்தின் ஆசாபாசங்களில், சிற்றின்பங்களில் அஸ்திபாரம் போட்டு உன் வாழ்க்கையை கட்டினல் அதன்பலன் அழிவுதான். உன் அஸ்திபாரம் எங்கே? சோதனையின் காலம் வந்தது காற்று வீசியது பெரு வெள்ளம் வந்தது. அந்த இரண்டு வீட்டின் மீதும் மோதியது. மணலின்மீது கட்டப்பட்ட வீடு தகர்ந்து போயிற்று. கற்பாறையின் மீது கட்டப்பட்ட வீடோ அசையாமல் அப்படியே நிலைத்து நின்றது. இப்போது தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனைப் பார்த்து கற்பாறையின் மீது வீடு கட்டியவன் சிரித்திருப்பான். இதுபோன்று தான் தேவனுடைய நியாயத் தீர்ப்பில் உண்மை எது? பொய் எது. வெள்ளை எது? கருப்பு எது? வைக்கோல் எது? செங்கல் எது? என்று வெளிப்படும். அன்று பாவத்தில் அஸ்திபாரம் போட்டு, இந்த பொய்யான மாயையான உலகில் அஸ்திபாரம் போட்டு தன் வாழ்க்கையை கட்டியவன் தப்பமாட்டான், உன் அஸ்திபாரம் கற்பாறையாகிய இறைவனா? இல்லை அழிந்துபோகும் இந்த மாயையான உலகமா?

### கிறிஸ்தவனின் கடமை :-

ஒரு கிறிஸ்தவனின் கடமை, முதலாவது தன் வாழ்க்கையை கிறிஸ்துவில் கட்டவேண்டும். தனிப்பட்ட வாழ்க்கை கிறிஸ்துவில் அஸ்திபாரம் போட்டு கட்டப்படவேண்டும். இரண்டாவது ஒரு கிறிஸ்தவன் தன் குடும்பத்தை கிறிஸ்துவில் கட்டவேண்டும். அதாவது குடும்பம் முழுவதும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு கட்டப்படவேண்டும். மூன்ருவது திருச்சபையை கட்டி எழுப்புதல், இந்த உலகத்தை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தும் குடும்பங்களாக கிறிஸ்துவுக்கு சாட்சி பகரும் குடும்பங்களாக ஒவ்வொரு குடும்பமும் காணப்படவேண்டும்,

உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினல் அவனுக்கு லாபம் என்ன? என்று இயேசு கேட்டார். ஒரு மனிதனுக்கு கல்வி இருக்கலாம். செல்வம் இருக்கலாம் உத்தியோகம் இருக்கலாம், சமுதாயத்தில் அந்தஸ்து

இருக்கலாம், நல்ல குடும்ப அமைப்பு, வாழ்க்கை இருக்கலாம். ஆனால் அவன் இரட்சிக்கப்படாவிட்டால் அவன் வாழ்க்கையின் இறுதியில் எந்த பயனும் இல்லை இறைவன் இல்லாத இடம் நரகத்திற்கு. இ ஞக்குள்தான் செல்ல வேண்டும். நித்திய வேதனைதான். மனிதனின் பிறப்பை விட இறப்பும் அதன்பின் உள்ள வாழ்வும் தான் முக்கியம். வேதம் சொல்லுகிறது ஒரேதரம் பிறப்பதும் இறப்பதும் நியாயத் தீர்ப்படைவதும் மனிதனுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. உன் அஸ்திபாரம் கிறிஸ்துவாகிய கன்மலையின் மீது அஸ்திபாரம் போடப்பட்டு அவரில் கட்டப்பட்டிருக்குமானால் நீ என்றென்றும் நிலைத்திருப்பாய்.

அப்சலோம்

தாவீது அரசனின் மைந்தன். இவனுடைய சகோதரி தாமாரை அம்னோன் கெடுத்துப்போட்டான். தன் தங்கையின் வாழ்வை சூறையாடிய கயவனை எப்படியாவது பழி தீர்த்துவிட வேண்டும் என்று துடிக்கிறான். சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். இறுதியில் மயிர் கத்தரிக்கும் இடத்தில் அரசகுமாரர்களுக்கு என்று ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தி அம்னோனையும் தந்திரமாய் அழைக்கிறான். அம்னோன் குடித்து வெறி கொண்டிருக்கும் போது அவனை கொன்று போட்டான். தாவீது அரசன் தனக்கு தொல்லை கொடுக்கக் கூடும் என்று கருதி கேசூரின் ராஜாவிடத்திற்கு ஓடிப் போனான். தாவீதின் படைத்தளபதி யோவாபின் முயற்சியினால் மூன்று ஆண்டுக்குப்பின் எருசலேமுக்கு வந்தான், இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப் போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக் கொள்ளத்தக்கவனும் இல்லை. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அவனில் ஒரு பழுதும்இல்லாதிருந்தது. அவன் தலைமுடி மிக அழகானதாகக் காணப்பட்டது.

அரசனின் அன்புக்குப் பாத்திரவானைப்போல் நடித்தான், தனக்கென்று குதிரைகளையும், இரதங்களையும், சேவகர்களையும் சம்பாதித்தான். இராஜாவிடத்திற்கு நியாயம் கேட்க வரும் மக்களைக் கட்டிப்பிடித்து முத்தமிடுவான். இவ்வாறு பாசமுள்ளவனைப் போல நடித்து இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தை கவர்ந்து கொண்டான். நாற்பது ஆண்டுகளை இவ்வாறு கழித்து விட்டான். தகப்பனுக்கு விரோதமாய் யுத்தம் தொடுத்தான். தாவீதும் அவன்

குடும்பத்தாரும் காடுகளிலும், மலைகளிலும் இரவு பகலாக அலைந்து திரிந்தனர். அகித்தோப்பேலின் ஆலோசனை அவனுக்கு தேவனுடைய வாக்கைப்போல இருந்தது. இறுதியில் அவன் ஆலோசனையை கேட்காததால் அகித்தோப்பேல் நான்று கொண்டு செத்தான். தாவீது அப்சலோமை ஒன்றும் செய்யாதீர்கள் என்று போர்ச்சேவர்களுக்கு கட்டளைக் கொடுத்திருந்தான். யுத்தம் மும்மரமாக நடந்தது, தேசமெங்கும் பரவியது. இஸ்ரவேலர் தாவீதின் வீரர்களுக்குமுன் எதிர்த்து நிற்கமுடியாமல் தோற்று ஓடினார்கள். இருபதினாயிரம் பேர் மடிந்தார்கள். அப்சலோம் தாவீதின் சேவகருக்குமுன் எதிர்பட்டான். அவன் கோவேறு கழுதையின் மீது ஏறிவரும்போது கர்வாலி மரத்தின் மீது அவனது அழகிய தலைமுடி சிக்கிக் கொண்டது. கழுதை ஓடிவிட்டது. அவன் வானத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்கிக் கொண்டிருந்தான். யோவாப் வல்லயங்களைக் கொண்டு அவனை குத்தினான். யோவாபின் ஆயுததாரிகள் அவனை அடித்துக் கொன்று போட்டார்கள்.

நண்பர்களே நீங்கள் மன்னிக்கும் மனப்பான்மையற்றவர்களாய் பழிவாங்கும் உணர்ச்சியுடன் வாழ்கிறீர்களா? தாய், தந்தை, உடன் பிறந்தவர்களை ஏமாற்றி வஞ்சித்து வாழ்கிறீர்களா? தாய் தகப்பனுக்கு விரோதமாய் நடக்கிறீர்களா, பேசுகிறீர்களா? பொல்லாத மக்களின் தீய ஆலோசனையை தெய்வ ஆலோசனையைப்போல கேட்டு வருகிறீர்களா? முடிவு அப்சலோமைப்போல் இருக்கலாம். இன்று உன் வாழ்க்கையை கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது போடுவாயா? நீ ஆசிர்வாதம்மாயிருப்பாய்,

**சாலமோன்:-**

**தா**வீது அரசனின் மைந்தன். பத்சேபாளுக்கு மகனாகப் பிறந்தவன் எருசலேம் ஆலயத்தை கட்டியவன், தேவதரிசனம் பெற்ற மனிதன், சிற்ற ஞானி சிறந்த செல்வந்தன். சிறப்பாக சமாதானத்தோடு ஆட்சி புரிந்து வந்தவன்.

ஆனால் காலப்போக்கில் தன் மனைவியை நேசித்ததுமல்லாமல் மோவாபியரும், அம்மோனியரும்' ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஸ்திரீகள் மேலும் ஆசை வைத்தான். ஐக்கியம் வைத்தான். 700 மனையாட்டிகளையும் 300 மறுமனையாட்டிகளை

யும் வைத்திருந்தான். இவர்கள் இவனுடைய இருதயத்தை வழுவிப் போகப் பண்ணினார்கள். அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாய் இருக்க வில்லை. அவன் தாவீதைப் போல கர்த்தரை பூரணமாய் பின் பற்றாமல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். தன் மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் பிரியப்படுத்தும்படி, கர்த்தரின் வழியை விட்டு விலகி மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும் மேடை கட்டி, தூபங்கட்டி பலியிட்டான்.

எனவே இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தர் 'சாலமோனுக்கு இரண்டு விசை தரிசனமாகி, அந்நிய தேவர்களை பின்பற்ற 'வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டு தன் இருதயத்தை திருப்பி அவர் கற்பித்ததை கைக்கொள்ளாமல் போனதினால் கர்த்தர் அவன் மீது கோபமானார். எனவே தேவன் அவன் மேல் கோபம் கொண்டு'' உன் ராஜ்ய பாரத்தை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்'' என்றார். கர்த்தர் ஆதாத் என்னும் ஒரு விரோதியை சாலமோனுக்கு விரோதமாக எழுப்பினார்: அவன் இராஜ்யம் சிதறடிக்கப்பட்டது.

தேவனுடைய பிள்ளையே நீ சாலமோனைப் போல ஞானமும், ஆஸ்தியையும், வல்லமையையும் உடையவனாக இருந்தாலும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வழி விலகிச் சென்றால் கர்த்தர் மீது போடப்படும் அஸ்திபாரம், பெயர்க்கப்பட்டு உலகத்தில் போடப்படுமானால் உன் நிலையான வாழ்வு சீர்குலைந்து விடும். உன் அஸ்திபாரம் எங்கே?

**சிம்சோன் :-**

இஸ்ரவேலில் தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானாகிய மனோவாவுக்கு மகனாகப் பிறந்தவன் சிம்சோன். இவன் இஸ்ரவேல் ஜனங்களை பெலிஸ்தியர் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தேவனால் தாயின் வயிற்றிலேயே தெரிந்தெடுக்கப்பட்டவன். இவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவனும் நசரேயனும் இருந்தான். ஆனால் இப்படிப்பட்ட அழகிய பலம் பொருந்திய வாலிபன். பரிசுத்தமாய் இருக்க தெரிந்து கொள்ளப்பட்டவன், தன்னை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தான்'

அதாவது தீட்டானதை, சிங்கத்தின் எலும்புக் கூட்டுக்குள்ளிருந் தேனே சாப்பிட்டதினால் தன்னை தீட்டுப்படுத்திக் கொண்டான். இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிக்கப் பிறந்தவனின், நரிகளின் வாலி நெருப்புப் பந்தத்தைக்கட்டி பெலிஸ்தியர்களின் வயல் வெளிகளை திராட்சத தோட்டங்களை அழித்துப் போட்டதால், பெலிஸ்தியர்க இஸ்ரவேல் ஜனங்கள் மீது யுத்தம் தொடுத்து அநேக இஸ்ரவேலை அழித்தார்கள். தேவனுக்கு அடிமையாய் இருக்க வேண்டியவன் பாவத்துக்கு அடிமையானான், மாமிச இச்சைக்கு தன்னை ஒப்பு கொடுத்தான். திம்னாத்தில் பெண் கொண்டான், காசாவில் பெண் கொண்டான், தெலீலாளின் மடியில் படுத்துறங்கினார். அதன் பலன் — அவன் கண்கள் பிடுங்கப்படுகிறது, கை கால்களுக்கு விலங்கிடப்படுகிறது. தூண்களுக்கு நடுவாக கட்டப்படுகிறான் அவமானமும் நிந்தையும் அவனை சூழ்ந்து கொண்டது. பெலிஸ்தி யர்களையும் அழித்தான், அவனும் அழிந்தான். அவன் மாமி இச்சைக்கு தன்னை ஒப்புக் கொடுத்ததினால் அவன் தன் வாழ்வை பாதியில் முடித்துக்கொண்டான்.

நண்பனே மாமிசத்தின் இச்சைகள் ஒரு மனிதனுக்கு சி நிமிஷங்கள், சில நாட்கள், சில வாரங்கள், சில மாதங்களுக்கு தான் இன்பத்தைத் தரமுடியும். நிரந்தரமான இன்பத்தை த முடியாது. நித்திய வாழ்வை தரமுடியாது. எனக்கு மிக வேண்டி ஒரு வயோதிகருடன் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அவ தான் வெளி நாட்டிற்கு இளமையிலேயே சென்றுவிட்டதாகவும், ப நாட்டைச் சேர்ந்த பெண்களுடன் தன் வாழ்வை உல்லாசமாக செ விட்டதாகவும் கூறினார். ஆனால் அவருடைய இறுதி நாட்கள் மி பரிதாபமாக இருந்தது. அதிக தூரம் நடக்க முடியாது, உடலில் ப வியாதிகள். முடிவு ஒருநாள் இரவு இரத்தக்குழாய் மூளையி வெடித்து பரிதாபமாக மரித்துப் போனார். இதை என் கண்க கண்டது.

நண்பனே உன் அஸ்திபாரம் எங்கே மாமிசமா? அல்லது க மலையாகிய கிறிஸ்துவா?

## யூதாஸ்

இயேசு பெருமான் தனது ஊழியத்தை இந்த உலகத்தி நிறைவேற்ற தனக்கு உதவியாக 12 சீஷர்களை தெரிந்தெடுத்தா ஒவ்வொரு சீஷனும் ஒவ்வொரு துறையில் சிறந்தவர்களாக

காணப்பட்டனர். யூதாஸின் திறமை, சாதுரியம் அவன் பணத்தை பொறுப்புடன் செலவு செய்யும் திறமையைக் கண்டுதான் அவன் கையில் பணப் பொறுப்பைக் கொடுத்தார். ஆரம்ப நாட்களில் அவனும் உண்மை உள்ளவனாகவேத்தான் காணப்பட்டான். காலப் போக்கில் இயேசுவின் மீது இருந்த பற்று குறைந்து பணத்தின் மீது பற்று அதிகரித்தது அதைக் கண்டு இயேசு மரியாளின் பரிமளத் தைலாபிஷேகத்தின் போதும் கடைசி பஸ்காவின்போதும் யூதாசுக்கு உணர்த்தி காட்டினார். அவன் மனசாட்சி அவனுக்கு உணர்த்திக் காட்டியும் அவன் பணத்தின் மீது கொண்ட ஆசையினால் 30 வெள்ளிக்காசுக்காக இயேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தார். 30 வெள்ளிக்காசு கிடைத்தால் அவன் மகிழ்ச்சி என்று நினைத்தான். ஆனால் 30 வெள்ளிக் காசு அவன் கையில் கிடைத்ததும் நிம்மதியை இழந்து விட்டான் கலக்கம் பயம் அவனைப் பிடித்துக் கொண்டது. ஓடுகிறான், பணத்தை திரும்ப தந்து விடுகிறேன். அந்த குற்றமற்ற இயேசுவை விட்டு விடுங்கள் என்று கதறுகிறான், அவர்கள் விடுதலை செய்ய மறுத்துவிட்டனர் எந்த 30 வெள்ளிக் காசு கிடைத்தால் போதும் என்று நினைத்தானோ அதே காசை ஆலயத்தில் வீசி எறிந்து விட்டு நிம்மதியற்றவனாய் ஓடி நாண்டு கொண்டு நின்று குடல் சரிந்து நா தள்ளி பரிதாபமாக தன் வாழ்க்கையை இடையில் முடித்துக் கொண்டான். அவன் விரும்பிய பணம் அவனுக்கு மனநிறைவை நிம்மதியையளிக்கவில்லை.

நண்பனே, நீ மற்றவர்களை ஏமாற்றி, வஞ்சித்து, நம்பிக்கை துரோகம் செய்து கள்ளக்கணக்கு, எழுதி வட்டி வாங்கி எவ்வளவு தான் பணம் சம்பாதித்தாலும், அந்த பணம் உனக்கு திருப்தியை, நிம்மதியைத் தர முடியுமா? பரலோகத்தில் அதைவைத்து 'ஒரு அங்குல நிலம் உன்னால் வாங்க முடியுமா? பணம் பாதாளம் வரை பாய்ந்து எட்டும்வரை தான்.

அமெரிக்க சினிமா உலகில் புகழ்பெற்ற நடிகைதான் மர்லின் மன்ரோ. ஏழ்மை குடும்பத்தில் பிறந்த அழகிய மங்கை, 'தனது அரிய முயற்சியினால் உலக புகழ்பெற்ற சினிமா நடிகையானாள். அழகு, உல்லாச மாளிகையுண்டு, விதவிதமான கார்கள், மனம் கவர்ந்த மனிதர்களுடன் உல்லாச வாழ்க்கை, கோடிக்கணக்கான ரசிகர்கள், அவளை நேசிக்க இலட்சோப இலட்ச மக்கள். ஆனால் ஒருநாள் காலை வானொலி அலறியது. பத்திரிக்கை செய்தி வந்தது

மர்லின்மன்ரோ தற்கொலை செய்து கொண்டாள் என்று. அந்த அதிர்ச்சியை தாங்காமல மரித்த, தற்கொலை செய்து கொண்ட வாலிபர்கள் எத்தனை!!

நண்பனே! நீ விரும்பிய பணம் வந்துவிட்டால் நிம்மதியாக வாழலாம் என நினைக்கிறாயா? இல்லை. உன் அஸ்திபாரம் கன்மலையாகிய கிறிஸ்துவா? இல்லை பணமா? உன் இறுதி முடிவு எப்படி? சிந்தி: செயல்படு.

## யோசேப்பு:-

யாக்கோபின் பதினொராவது மைந்தன் யோசேப்பு. இவன் ராகேலின் மைந்தன் எனவே யாக்கோபு யோசேப்பின் மீது அதிக அன்பு வைத்திருந்தான். பலவர்ண அங்கியை தைத்துக் கொடுத்தான்: எனவே அவனது. மூத்த பத்து சகோதரர்களும் அவன்மீது பொறாமை கொண்டனர், பகைத்தனர். கொலை செய்ய வகை தேடினர். சீகேமுக்கு ஆடுமேய்க்கச் சென்ற சகோதரர்களின் க்ஷேமம் விசாரிக்கப்போனான். ஆனால் அவன் மீது பொறாமை கொண்ட சகோதரர்கள் அவனை ஈவு இரக்கமின்றி தண்ணீரில்லாத வெறுங் குழியில தூக்கிப் போட்டனர், யூதாவின் ஆலோசனைப்படி அவனை எகிப்துக்குப்போகும் இஸ்மவேலரிடம் 20 வெள்ளி காசுக்கு விற்றுப் போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்தில் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபாரிடம் விற்றார்கள். கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரிய சித்தியுள்ளவனானான். போத்திபார் யோசேப்பைதன் வீட்டுக்கு விசாரணைக் காரனுமாக்கி தனக்குண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். யோசேப்பின் நிமித்தம் கர்த்தர் அவன் வீட்டை ஆசீர்வதித்தார்.

போத்திபாரின் மனைவி யோசேப்பு அழகான ரூபமும், சௌந்தரியமுகமும் உள்ளவனாயிருப்பதைக்கண்டு அவன் மீது ஆசை வைத்தாள். பாவம் செய்ய அவள் அவனை பலவந்தம் செய்தபோது நான் இந்த பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று, தன் வஸ்திரத்தைக் கூட விட்டுவிட்டு வெளியே ஓடினான்.

பாவஞ்செய்ய மறுத்து ஓடிய யோசேப்புக்குக் கிடைத்த பரிசு சிறைச்சாலை, சித்திரவதை, அவமானம், நிந்தை, வேதனைதான். அவனை பாவம் செய்ய தூண்டிய போத்திபாரின் மனைவியை அவனிடம் காட்டிக்கொடுக்காமல் பழியை தன்மீது ஏற்றுக் கொண்டான். கர்த்தரோ யோசேப்போடே இருந்தும் அவன்மேல் கிருபை வைத்து சிறைச்சாலை தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார். பார்வோனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னதின் நிமித்தம் அவனுடைய கண்களிலும் தேவன் தயவு கிடைக்கச் செய்தார். எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக வைத்து ஒன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபாரின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை மனைவியாகக் கொடுத்தான். கானான் தேசத்தில் பஞ்சம் கொடியதானது. அவன் சகோதரர் பத்துபேரும் தானியம் வாங்கும்படி எகிப்துக்கு வந்தார்கள். தன்னை பரிகாசம் பண்ணி, ஈவு இரக்கமின்றி, சகோதர பாசமுமின்றி விற்றுப் போட்டவர்கள் என்பதை தூரத்தில் வரும்போதே யோசேப்பு கண்டு கொண்டான். அவன் பழிவாங்க நினைத்தால் அவர்களை சிறைச்சாலையில் அடைத்து, சித்ரவதை செய்து பட்டினி போட்டு கொன்றிருக்கலாம் ஆனால் அவனோ அவர்களை கட்டிப்பிடித்து முத்தமிட்டு அழுது, உணவு கொடுத்து பஞ்சகாலம் தீரும் வரை அவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் போஷித்தான். கனி தரும் செடியாக விளங்கினான். அவன் நிமித்தம் அவன் குடும்பத்தாருக்கு ஜீவரட்சனை கிடைத்தது.

தேவனுடைய பிள்ளையே யோசேப்பு தந்தைக்குக் கீழ்படிந்தான், தீமை செய்த சகோதரர்களுக்கு நன்மை செய்தான், பாவம் செய்ய சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கிடைத்தபோது கூட தேவனுக்கு பயந்து பாவத்துக்கு விலகி ஓடினான். அவன் பாவம் செய்ய சம்மதித்திருந்தால் போத்திபாரின் அரண்மனையில் சகல இன்பங்களுடன் உல்லாசமாக வாழ்ந்திருக்கலாம், பாவம் செய்திருந்தால் அவன் கைகளுக்கு இரும்பு விலங்கு விழுந்திருக்காது, ஆனால் இருதயத்துக்கு பாவவிலங்கு விழுந்திருக்கும். தன்மீது பழியை ஏற்றுக் கொண்டதினால் போத்திபாரின் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. அவன் தேவனுக்கு பயந்து அவர்மீது நம்பிக்கை வைத்திருந்ததால் அதிபதியாக உயர்த்தப்பட்டான். அவன் நிமித்தம் இஸ்ரவேல் வம்சம் ஆசீர்வதிக்கப்பட்டது.

தேவனுடைய பிள்ளையே, நீ எங்கே உன் அஸ்திபாரத்தை போட்டிருக்கிறாய். யோசேப்பைப் போல் ஜீவனுள்ள தேவன் பேரிலா? உலகத்தின் சிற்றின்பம் ஆசா, பாசங்களிலா? அவர்களைப் போல ஜீவனுள்ள தேவன் பேரில் விசுவாசம் வைத்து, கர்த்தருக்கு பயந்து உத்தமனாய் நடந்தால் கர்த்தர் உன்னை யோசேப்பைப் போல உயர்த்துவார், ஆசீர்வதிப்பார்.

**நேபுக்காத்நேசர்:-**

பாபிலோனின் மாபெரும் மன்னன் நேபுகாத்நேசார். இவன் தேவனுடைய கிருபையாலும், தெய்வபிள்ளைகளாகிய சாத்ராக் மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் ஒத்தாசையாலும், பாபிலோன் ராஜ்யத்தை சிறப்பாக ஆட்சி செய்துவந்தான். ஒருநாள் அரண்மனையின் மேல் உலாவிக் கொண்டிருந்தான்.'' இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா'' என்றான், இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும் போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி ராஜாவாகிய நேபுகாத் நேசாரே, ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று, மனுஷரினின்று தள்ளப்படுவாய், வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய் மாடுகளைப் போல புல்லை மேய்வாய்' என்றது அப்படியே 'அவன் வாழ்க்கையில் சம்பவித்தது. புத்தி தெளியும் வரை புல் மேய்ந்தான் என காண்கிறோம்.

தேவனுடைய பிள்ளையே தெய்வ கிருபையாலும், மிகுந்த இரக்கத்தாலும், சுத்த கிருபையாலும்தான் நாம் தாழ்விலிருந்து உயர்த்தப்பட்டு இந்த நிலையில் இருக்கிறோம். நம் ஆதிப்பிதாக்களின் ஏழ்மை நிலையை எண்ணிப்பார்க்கும் போது, போதுமான உணவில்லாமல், இருப்பிடமில்லாமல், சரியான உடை இல்லாமல் வாழ்ந்த காலத்தை நினைக்கும்போது தேவன் நம்மை 'எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார், நம் குடும்பத்தை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதையும் பார்க்கும்போது தேவன் நம்மீது வைத்த அன்பு, இரக்கம் வெளிப்படும், ஆனால் நாம் இவைகளை தெய்வ கிருபை இரக்கம், ஆசீர்வாதம் என்பதை உணராமல், நம் சாதுரியத்தாலும் திறமையாலும், அறிவாலும் பலத்தாலும் இவ் உயரிய நிலைக்கு

வந்தோம் என்று மேட்டிமை கொள்ளுகிறோம் தெய்வத்தை உதாசீனப்படுத்துகிறோம். தேவனுடைய கிருபை எடுபடும்போது நம் நிலை பரிதாபமாக முடிகிறது

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் உண்டு. பெற்றோர் தெய்வ பக்தியுள்ளவர்கள். தேவனுடைய கிருபையாலும் இரக்கத்தாலும், அயராத உழைப்பாலும் பல இலட்சத்துக்கு அதிபதியானார்கள். ஆனால் அப்பெரியவரின் மரணத்திற்குப்பின் குடும்பத்தினர் தெய்வத்தை மறந்தனர், மேட்டிமை இருதயத்தை ஆட்கொண்டது. மனம்போனவாழ்வு. இறுதியில் அக்குடும்பம் நொடிந்து போயிற்று.

இன்று அநேக கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படுவது என்னவென்றால், ஜாதிப்பெருமை பணப்பெருமை அழகுப் பெருமை, கல்விப் பெருமை, பக்திப்பெருமை, குடும்ப பெருமை, ''பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபையளிக்கிறார் (யாக் 4:6) பரிசுத்தப்பவுல் தன்னைக் குறித்து கூறும் போது தான் பாவியிலும் பிரதானபாவி என்றும், துடைத்துப்போடும் அழுக்குக்கு ஒப்பானேன் என்கிறார். தாவீது யோபு தேவனுக்கு முன்பாக நீசன் என்றும், காற்றில் பறக்கும் சருகு என்கிறார்கள், தாவீது நானோ ஒருபுழு என்கிறார். இவ்வாறு இவர்கள் தேவனுக்கு முன்பாக தாழ்த்தியதால் அவர்கள் உயர்த்தப்பட்டார்கள்.

இவ் உலகத்தின் மக்களுக்கு முன்பாக நாம் தாழ்மையுள்ளவர்களாகவே காணப்படவேண்டுமேயன்றி பெருமையுள்ளவர்களாகக் காணப்படக்கூடாது. அப்போது மட்டுமே தேவ தயவு கிருபை கிடைக்கும். ஆசிர்வதிக்கப்படுவோம். உன் அஸ்திபாரம் எங்கே? பெருமையிலா? அல்லது தாழ்மையிலா? கிறிஸ்துவாகியகன்மலையிலா? அல்லது உலகத்திலா?

யோபு:-

**யோ**பு ஒரு நீதிமான் சன்மார்க்கன், செல்வந்தன். இவன் வாழ்க்கையில் பயங்கர சோதனை சாத்தானால் உண்டாயிற்று. தேவனும் அதற்கு அனுமதி கொடுத்தார். ஆடுமாடு, ஆஸ்திகளை

இழந்தான். தரித்திரனைப் போலானன் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்" என்று சோர்ந்து போகாமல் தேவன் பேரில் பற்றுதலாய் இருந்தான். பிள்ளைகளை வானத்திலிருந்து அக்கினி விழுந்து பட்சித்துப் போட்டது. அதைதையைப் போலானன்' சோர்ந்து போகவில்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். அவருக்கு ஸ்தோத்திரம் என்றான். மூன்றாவது அவன் கொடிய பருக்களால் உச்சங்காலிலிருந்து உள்ளங்கால் வரை வாதிக்கப் பட்டான். இரணமும் சீழும் வடிந்தது. சாம்பலில் உட்கார்ந்து ஓட்டை வைத்து சுரண்டிக் கொண்டிருந்தான். அப்போதும் சோர்ந்து போகவில்லை' தேவனிடத்தில் நன்மையைப் பெற்ற நான் தீமையைப் பெறாமல் இருக்கலாமோ' என்றான். அவன் தேவன் பேரிலுள்ள விசுவாசத்தில் குன்றிப்போகவில்லை, தேவன் முன்னிலமையைவிட பின்நிலையை இரண்டு மடங்கு அவனை ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். காரணம் ஜீவனுள்ள தேவன் பேரில் அவன் விசுவாசம் வைத்திருந்தான். அவன் அஸ்திபாரம் அவர் பேரில் போடப்பட்டிருந்தது.

எனக்குப் பிரியமான தேவனுடையப் பிள்ளையே யூதாஸ் சிம்சோன், நெபுகாத்நேசார் போன்றவர்கள் ஜீவனுள்ள தேவன் பேரில் அஸ்திபாரம் போடுவதற்கு பதில், நம்பிக்கை வைப்பதற்கு பதில் பணம், மாமிசம் ஜீவனத்தின் பெருமையில் வைத்ததால் பல இன்னல்களுக்குள்ளாகி வாழ்க்கையை பாதியிலேயே முடித்துக் கொண்டனர். சவுல் அரசன், பிலேயாம் போன்றவர்கள் தேவனுக்கு கீழ்படியாததால் பல உபத்திரவங்களை அனுபவித்தனர். ஆனால் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ, யோபு, யோசேப்பு போன்றவர்கள் ஜீவனுள்ள தேவனில் அஸ்திபாரம் போட்டதாலும் நம்பிக்கை வைத்திருந்ததாலும் அவர்கள் உபத்திரவத்தின் பாதை யைக் கடந்து சென்ற போதிலும் வழுவாமல் நிலைத்து நின்றனர். உன் அஸ்திபாரம் எங்கே? கிறிஸ்துவாகிய கன்மலையா? உலகமா?

## தானியேல்

தானியேல் இஸ்ரவேல் வம்சத்தில் ராஜகுலத்தைச் சேர்ந்தவன். யாதொரு மாசும் இல்லாதவன். அழகில் சிறந்தவன். சகலஞானத்திலும் தேர்ந்தவன்.

அறிவில் சிறந்தவன், கல்வியில் நிபுணன் தேவன் பேரில் பற்றும் விசுவாசம் கொண்டவன். அந்நியசிலையை வணங்க மறுத்தான் எனவேதான் சிங்கத்தின் வாய்க்கு தேவன் அவனைதப்புவித்தார். தானியேலின் வாழ்க்கையில் வெற்றியின் இரகசியத்திற்கு காரணம் என்னவென்ருல்.

**இருதயத்தில் தீர்மானம்:**

ராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும், தான் குடிக்கும் திராட்சரசத்திலேயும், அவன் அனுபவிக்கும் சகல இன்பங்களையும் அனுபவிக்க அனுமதித்தான் ஆனல் தானியேல் ராஜாவின் போஜனத் தினுலும், அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினுலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாது என்று தன் இருதயத்தில் தீர்மானித்தான் (தானி 1 : 8). அதன்படியே தன்னை காத்துக் கொண்டான்.

இன்று நமது தீர்மானங்கள் வாயளவிலும், தாள்களில் எழுதிவைப்பதிலும் தான் காணப்படுகிறதே தவிர இருதயத்தில் தீர்மானம் செய்வதில்லை. அப்படியே தீர்மானம் செய்தாலும் தன்னைக் காத்துக்கொள்ள முயற்சிப்பதில்லை. நமக்கு முன்பாக புகைபிடித்தல் மது அருந்துதல் சினிமாபார்த்தல், இன்னும் பல தீய காரியங்கள் காணப்படலாம், இவைகளுக்கு நம் இருதயத் தை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும்

**விசுவாசம்**

தரியு ராஜா தன்னைத்தவிர வேறு எந்த தெய்வத்தை யும் வணங்கக் கூடாது என்று கட்டளையிட்டான். இக் கட்டளையை மீறினல் அவர்கள் சிங்கக் கெபியில் போடப் படவேண்டும் என்பது. இக்கட்டளையை தானியேல் அறிந்திருந்த போதிலும் தேவன் பேரிலுள்ள விசுவாசத் தின் காரணமாய் வழக்கம்போல எருசலேமுக்கு நேராக

பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினன். எனவே சிங்கத்தின் கெபியில் போட்டார்கள். தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயை கட்டிப்போட்டார் அவன் தேவன் பேரில் விசுவாசம் உடையவனாய் இருந்தபடியால், அவனில் ஒருசேதமும் காணப்படவில்லை (தானி 6 : 23)

இன்று உனக்கு துன்பங்கள், தொல்லைகள் வரும்போது தேவன் பேரில் விசுவாசம் உள்ளவனாக காணப்படுகிறாயா ? தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ஆபகூக் 2 ; 4) விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது. நம் விசுவாசம் கிரியையுள்ளதாகக் காத்துக் கொள்ளுவோம்.

**ஜெபம்**

தானியேல் துன்பவேளையிலும், அந்தி, சந்தி, மத்தியான வேளையிலும் ஜெபித்தான் இன்று நாம் துன்ப வேளையில் சோர்ந்து போகாமல் இடைவிடாது ஜெபிக்கிறோமா? நினிவேயில் உபவாசஜெபம் தேவனுடைய மனதை மாற்றி நினிவே அழிவிலிருந்து காக்கப்பட்டது. எஸ்தரின் உபவாச ஜெபம், யூதர்களை அழிவிலிருந்து இரட்சித்தது. நெகேமியாவின் ஜெபம் எருசலேமின் அலங்கத்தை மீண்டும் கட்டி எழுப்பியது. இன்று நம் வாழ்க்கை ஜெப வாழ்க்கை நிறைந்ததாய் காணப்படுமானால் தோல்விக்கு இடமே இல்லை.

**பரிசுத்த ஆவி**

தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை இராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். இப்பரிசுத்த ஆவியானவரின் உதவி

யின்றி நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழமுடியாது. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பலனடைந்து எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியாவிலும் உலகத்தின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப்போ 2 : 8) சாட்சியின் ஜீவியம், வெற்றியின் வாழ்க்கைக்கு பரிசுத்த ஆவியானவர் அவசியம்.

தேவனுடைய பிள்ளையே உன் வாழ்க்கை வெற்றியாக அமைய வேண்டுமானால் தானியேலிடம் காணப்பட்டபடி இருதயத்தில் தீர்மானம். தேவன் பேரில் விசுவாசம், இடைவிடாத ஜெபம், பரிசுத்த ஆவியானவரின் அனுக்கிரகம் தேவை.

பசிபிக் மகா சமுத்திரத்தில் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. ஏராளமான மக்கள் அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். திடீர் என்று பலத்த காற்று வீச ஆரம்பித்தது. கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. தண்ணீர் கப்பலுக்குள் வந்து விழுந்தது. எல்லோரும் தங்கள் தங்கள் தெய்வத்தை நோக்கி மன்றாடத்துவங்கினர். இறைவா எங்கள் நாடு சேர எங்கள் குடும்பத்தைக் காண, எங்கள் உடமைகளைக் கரைசேர்க்க உதவிச் செய்யும் என்று தேவனை நோக்கி மன்றாடிக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும் இடையில் 8 வயது நிரம்பிய ஒரு சிறு பெண் கப்பலில் அங்கும் இங்குமாக பாடித்திரிந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட ஒரு வயோதிகர் அந்த சிறு பெண்ணை அழைத்து ஏனம்மா காற்று பயங்கரமாக வீசுகிறது, கப்பல் அமிழப் போகிறது, எல்லோரும் உயிருக்காக கடவுளைநோக்கி கெஞ்சும்போது நீ மட்டும் மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டிருக்கிறாயே. இதற்கு காரணம் என்ன என்று கேட்டார். உடனே அந்த சிறுபெண் அந்த வயோதிகரைப் பார்த்து ஐயா, இந்த கப்பல் ஓட்டுவது யார் தெரியுமா? இந்த கப்பலை ஓட்டுவது யார் தெரியுமா? இந்த கப்பலை

ஓட்டுவது யார் தெரியுமா? என் தந்தை மாலுமியாக இருந்து இந்த கப்பலை ஓட்டும்போது புயல் அடித்தால் எப்படி சமாளிக்கவேண்டும். பாறைகள் குறுக்கிட்டால் எப்படி விலக்கிச் செல்லவேண்டும், என்று அவருக்குத் தெரியும், ஆகையால் நான் பயப்படமாட்டேன் என்று கூறியதாம்,

என் அருமையான தேவனுடைய பிள்ளையே இயேசு உன் வாழ்க்கையில் நடு நாயகராக இருந்து உன்வாழ்க்கை படகை ஓட்டிச் சென்றால். உன் நம்பிக்கை, அஸ்திபாரம் அவர்மீது இருக்குமானால் எத்தனை கஷ்டங்கள், துன்பங்கள், நஷ்டங்கள். அவமானங்கள், கலக்கங்கள் சோர்வுகள் வந்தாலும் உன் இதயம் கலங்காது உன் வாழ்க்கை கடம்புரளாது. நீ என்றென்றும் நிலைத்திருப்பாய். உன் அஸ்திபாரம், நம்பிக்கை எங்கே?

**பரிசுத்த பவுல்:-**

தரிசு பட்டணத்தான் இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன். யூதனுக்கு யூதன், ரோமனுக்கு ரோமன், நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவன், கமாலியேலின் பாதத்தில் கல்வி கற்றவன் சனகரிப் சங்கத்தில் ஓர் அங்கத்தினன், பக்தி வைராக்கியத்தின்படி, சபைகளை துன்புறுத்தியவன். இப்படிப்பட்டவன் கிறிஸ்தவர்களை அடியோடு அழித்துவிடவேண்டும் என்று தீர்மானித்து, பிரதான ஆசாரியனிடம் நிருபங்களை வாங்கிக் கொண்டு எருசலேமிலிருந்து தமஸ்குவுக்கு போகும் வழியில் இயேசு ஒளியின் ரூபத்தில் அவனை சந்திக்கிறார். கண்பார்வையை இழக்கிறார் அனனியா வீட்டில் கண் திறக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறார். ஞானஸ்நானம் பெற்றார். தேவனுக்காக சாட்சி கூற ஆரம்பித்தார்.

இதுவரை இவர் உலக ஞானத்திலும், பக்திவைராக்கியத்திலும் அஸ்திபாரம் போட்டு தன் வாழ்வை கட்டியவர். இப்போது கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது அஸ்திபாரம் போடுகிறார். பிலிப்பியர் 4:11-13,19 ல் கூறுகிறார். ''என் குறைச்சலினால் நான் இப்படிச்

சொல்லுகிறதில்லை. ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும். பரிபூரணமடையவும், குறைபடவும் போதிக்கப்பட்டேன், என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.'' பிலிப்பியர் 3:7,11ல் "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன். கிறிஸ்து என் ஜீவன், சாவு என் ஆதாயம்'' என்று கூறுகிறார். இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்த இடத்தை பிடித்துக்கொண்டவர் இவரே இவர் 13 நிருபங்களை எழுதியுள்ளார், அநேகம் ஆதித் திருச்சபைகளை நிறுவியுள்ளார். என் அருமையான தேவனுடைய பிள்ளையே பரி· டவுல் இயேசு கிறிஸ்துவின் மீது அஸ்திபாரத்தை உறுதியாக போட்ட காரணத்தால்தான் ''நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன்'' என கூறுகிறார். நீ இவ்வாறு கூறமுடியுமா? நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. (II தீமோத் 4:7,8) நீ இவ்வாறு உன் வாழ்க்கையின் இறுதியில் கூறமுடியுமா? அப்படியானால் உன் அஸ்திபாரம் கிறிஸ்துவின் மீது போடப்படவேண்டும்.



**இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். (சங். 128 : 4)**

# குடும்பங்கள்

## ஆதாம் ஏவாள்

தேவன் இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் தனது வார்த்தையினாலே சிருஷ்டித்தார். (வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று) ஆனால் ஆதாம், ஏவாளை மட்டும் தன் சாயலாக தன் கரத்தினால் சிருஷ்டித்து ஜீவ சுவாசத்தை ஊதி, ஜீவாத்மாவாக மாற்றி, அழகான ஏதேன் தோட்டத்தில் வைத்து "நீங்கள் பலுகி, பெருகி, இந்த பூமியை நிரப்பி ஆண்டு கொள்ளுங்கள்" என்று ஆசீர்வதித்தார். மனிதன் நெற்றிவேர்வை நிலத்தில் விழ பாடுபட்டு புசிக்க வேண்டியதில்லை. காய்களையும் கனிகளையும் பறித்து புசித்தான். வெள்ளாடும், சிங்கமும் ஒன்றாக மேயுமாம், விரியன் பாம்பின் புற்றுக்குள் கையை விட்டாலும் அது தீண்டாதாம், மனிதனுக்கு எதிரியே கிடையாதாம். ஆகாயத்தில் நீர் மண்டலங்களை விரித்திருந்தார். எனவே வெயிலோ மழையோ, குளிரோ மனிதனை வாட்டிப்படைக்கவில்லை. இயற்கையின் மத்தியில் படுத்து, உறங்கினான் தேவனும் அவனோடு தினமும் உள்ளலாவி வந்தார்.

ஆனால் தேவன் எந்தக்கனியை புசிக்காதே, அதை புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய் என்று விலக்கி வைத்திருந்தாரோ அந்த கனியை ஏவாள் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் புசித்தாள். தான் பாவம் செய்ததை உணர்ந்த ஏவாள் ஆதாமையும் புசிக்கும்படிச் செய்கிறாள். அவனும் புசித்தான். இருவருக்குள்ளும் கீழ்ப்படியாமையாகிய பாவம் பிரவேசித்தது. தெய்வ பிரசன்னத்தை இழந்தார்கள், தெய்வ சமாதானத்தை இழந்தனர், சந்தோஷத்தை இழந்தனர். பயம், கலக்கம், நடுக்கம், திகில் அவர்களைப் பிடித்துக் கொண்டது. தேவனை காண அஞ்சி ஓடி ஒளிகின்றனர். தேவனுடைய சாபத்துக்குள்ளாயினர். தோட்டத்தை விட்டே விரட்டப்பட்டனர். பூமி பலனை கொடுக்க மறுத்தது, முள்ளையும் குருக்கையும் பிறப்பித்தது, மிருகங்கள் மனிதனுக்கு எதிரிகளாயின. வானத்திலுள்ள தண்ணீர் நோவாவின் காலத்தில் மழையாக பூமியில் பெய்தது. சூரிய வெப்பம், மழை, குளிர் மனிதனை வாட்டத்தொடங்கியது. பாவத்தின் நிமித்தம் உலகம் சபிக்

கப்பட்டது. காயின் ஆபேலிடம் பொறாமை கொண்டான். பின் எரிச்சல், கோபம் ஏற்பட்டது. அதன்பின் அது கொலையாக மாறியது நோவாவின் காலத்தில் பாவம் பெருகியது தேவன் நோவாவின் குடும்பத்தை தவிர உலகத்திலுள்ள அத்தனை மக்களையும் அழித்தார் — மீண்டும் பாவம் பெருகியது.

கீழ்ப்படியாமை

தேவன் ஏதேன் தோட்டத்தில் ஜீவ விருட்சத்தையும்' நன்மை தீமை அறியத்தக்க கனியையும் உண்டாக்கி, நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்கவேண்டாம், அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கூறினர் ஆனல் ஏவாள் தேவனுடைய வார்த்தையை அற்பமாய் எண்ணி, கீழ்படியாமல் அந்த கனியை புசித்தாள். ஆதாமையும் புசிக்கச் செய்தாள். இன்று நாம் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிகிரேமா? இல்லையானல் தேவசாபம் தான் நம் குடும்பத்தை ஆட்கொள்ளும்.

இச்சையடக்கமின்மை

ஏவாள் அந்த நன்மை தீமை அறியத்தக்கக் கனி புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமுமாய் இருக்கிறது என்று கண்டு அதை பறித்து புசித்தாள். இன்று நம்முடைய பார்வைக்கும் உலகத்திலுள்ள எல்லாம், பொருளோ, வீடோ, நிலமோ, ஆட்களோ இன்பமாகத் தோன்றலாம். பார்ப்பது தவறு அல்ல. ஆனல் இச்சிப்பது, அதன் மீது ஆசை வைப்பதுதான் 'தவறு. பண்டித பில்லி கிரஹாம் கூறுகிருர். "First look is not as in but the second look is the sin" முதல் பார்வை தவறல்ல, இரண்டாவது பார்வைதான் தவறு. உள்ளத்தில் ஒரு இச்சை அல்லது ஆசை ஏற்பட்டபின் தான் திரும்ப பார்க்கிரேம். அதுதான் தவறுஎன்று கூறுகிருர். எனவே பிறர் பொருள்மீது ஆசை வைப்பது தவறு. இச்சையடக்கம் இல்லாமையால்தான் அநேக குடும்பங்கள் இன்று சீரழிகின்றன. கண்டதை எல்லாம் வாங்கவேண்டும், அனுபவிக்கவேண்டும், கடன் பட்டாலும் சரி எல்லாவற்றையும் விற்றாலும் சரி என்று துணிந்து விடுகிரேம். வருவாய்க்குத்தக்க செலவு செய்ய கற்றுக்கொள்ள வேண்டும்.

**பழிசுமத்துதல்**

தேவன் ஆதாமைப் பார்த்து ஏன் இந்தவிலக்கப் பட்ட கனியை புசித்தாய் என்று கேட்ட போது, நான் புசிக்கவில்லை. நீர் தந்த ஏவாள் புசிக்கும்படிச் செய்துவிட்டாள் என்றான். என்ன காரியம் செய்தாய் என்று ஏவாளிடம் கேட்டபோது, நான் ஒன்றும் செய்யவில்லை. இந்த சர்ப்பம் என்னை வஞ்சித்து விட்டது என்று கூறினாள். இன்று நாம் ஒரு தவறு செய்தால் அதை ஏற்றுக் கொள்ளுவதில்லை, மற்றவர்கள் மீதும் குற்றத்தை சுமத்துகிறோம். பழிபோடுகிறோம், நாம் அடையும் தண்டனையை மற்றவர்களும் அனுபவிக்கட்டுமே என நினைக்கிறோம். அது தவறு. நாம் பட்ட பாடுகள், வேதனைகள் போதும், மற்றவர்களாவது நிம்மதியோடு வாழட்டும் என நினைக்கவேண்டும். மற்றவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. யோசேப்பு மீது போத்திபாரின் மனைவி அநியாயமாக பழி சுமத்திய போது, அவளை காட்டிக் கொடுக்காமல் அவனே தன் மீது அந்த பழியை ஏற்றுக் கொண்டதினால் அவன் மட்டும் தண்டனைஅனுபவித்தான். போத்திபாரின் வாழ்க்கை பாதிக்கப்படவில்லை, அநியாயமாக பாடுபட்ட யோசேப்பை தேவன் உயர்த்தினார் ஆசீர்வதித்தார். இன்று மற்றவர்கள் அவமானங்களையும், நிந்தைகளையும் துன்பங்களையும் அனுபவிக்க நாம் காரணமாயிருக்கிறோம்.

தேவனுடைய பிள்ளையே' உலகத்திற்கே ஆசீர்வாதமாயிருக்க வேண்டிய முதல் குடும்பம், இந்த உலகமே சபிக்கப்படுவதற்கு காரணமாகப் போய்விட்டது இவர்களின் கீழ்படியாமையின் நிமித்தம் பாவம் மனுக்குலத்தை ஆட்கொண்டது. பூமி சபிக்கப்பட்டது, அது தன் பலனை கொடுக்க மறுத்தது. முள்ளையும் கருக்கையும் பிறப்பித்தது, வெயில் குளிர் மழை மனிதனை வாட்டிப்பனடக்க ஆரம்பித்தது மிருகங்கள் மனிதர்களுக்கு எதிரிகளாயின. ஆதாமின் மகன்களுக்குள் பொறாமை, எரிச்சல், கோபம், கொலை. எனவே மரணமும், துக்கமும் வேதனையும், கவலையும் கண்ணீரும் அந்த குடும்பத்தை ஆட்கொண்டது. இன்று நம் குடும்பத்திலும் இவ்வாறு காணப்படுகிறது என்றால், நாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படியவில்லை. என்பதுதான் அர்த்தம். நாம் குடும்பமாக தேவனிடத்தில் பாவத்தை அறிக்கை செய்வோமா? அவர் கிருபைக்காக கெஞ்சுவோமா? அவர் இரக்கத்தைப் பெற்று ஆசீர்வாதமாக வாழ்வோமா? உன் குடும்பம் கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டுள்ளதா? இல்லை உலகமா?

இன்று நம் குடும்பமும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் கிறிஸ்தவக் குடும்பமாகக் காணப்படுகிறதா? அல்லது நம் குடும்பத்தின் நிமித்தம், நம் செய்கையின் நிமித்தம பேச்சின் நிமித்தம் கண்ணீர் வடிக்கும் குடும்பங்கள் எத்தனை? உடைந்து போன குடும்பங்கள் எத்தனை? கறைப்பட்டுப்போன வாழ்க்கைஎத்தனை? சீரழிந்துபோன வாழ்க்கை, குடும்பங்கள்எத்தனை? சிந்தித்துப்பார். நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறாயா? உன் குடும்பம் மற்றவர்கள் குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறதா?

லோத்து

ஆபிரகாமின் அண்ணன் மகன் லோத்து. இருவரும் எகிப்தை விட்டு புறப்பட்டு பெத்தேலுக்கும். ஆயிக்கும் நடுவாகக் கூடாரம்போட்டு தங்கினார்கள். ஆபிரகாமின் மந்தை மேய்ப்பர்களுக் கும் லோத்துவின் மந்தை மேய்ப்பர்களுக்கும் இடையே வாக்கு வாதம் உண்டாயிற்று. ஆகையால் இருவரும் பிரிந்து செல்லும் நிலமை உருவாயிற்று ஆபிரகாம் லோத்தை அழைத்து நீ விரும்பு கின்ற இடத்தை முதலாவது தெரிந்துகொள், நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன் என்றான். அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து யோர்தான் நதிக்கு அருகாமையிலுள்ள சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தின தாயிருக்கக் கண்டு அதை தெரிந்து கொண்டான். கூடாரம் போட்டான், வாசம் பண்ணினான்.

உலகசிநேகம்

லோத்தின் மனைவி தேவனை நேசிப்பதற்குப்பதில் சோதோம் கொமாராவின் பாவத்தை, இன்பத்தை நேசித்தாள், அநுபவித் தாள். பிள்ளைகளையும் தெய்வபக்தியில் வளர்க்க தவறிவிட்டாள். தெய்வத்தை அறியாத பிள்ளைகளாய் உலக பற்றோடு வளர்த்தாள். தெய்வ பக்தியுள்ள மருமகன்மார்களை தங்கள் பிள்ளைகளுக்குத் தெரிந்தெடுக்கவில்லை. அதற்குப்பதிலாக சோதோமின் பாவத்தில் வாழ்ந்த உலகப்பற்றுள்ள மருமகன்மார்களை தங்கள் பிள்ளைகளுக்குத் தெரிந்தெடுத்தாள் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழவில்லை. சோதோமின் மீது தேவன் அக்கினியையும் கந்த கத்தையும் விழச் செய்தபோது, லோத்து சோதோமைத் திரும்பிப் பாராதே என்று எச்சரித்தபோதும் கூட கணவனின் வார்த்தைக்கு அவள் கீழ்ப்படியாமல் திரும்பிப் பார்த்ததின் நிமித்தம் உப்புத் தூணானாள்.

**சுயசித்தம்**

என் அருமையான தேவனுடைய பிள்ளையே லோத்து ஆபிரகாமைப்போல தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்காமல் சுய சித்தம், விருப்பத்திற்கு இடம் கொடுத்துப் பகட்டான பாவம் நிறைந்த சோதோமை தெரிந்து கொண்டான். இன்று நம்மில் அநேகர் தெய்வ சித்தத்திற்கு தங்களை அர்ப்பணிக்காமல் தன் சுய விருப்பத்தின்படி, சுய சித்தத்தின் படி செய்து பல தொல்லைகளை நாமே தெரிந்துகொள்ளுகிறோம் உன் வாழ்க்கையில் தெய்வ சித்தத்திற்கு இடம் கொடுத்திருக்கிறாயா ?

**கண்களின் இச்சை**

லோத்து கண்களை ஏறெடுத்துப்பார்த்த போது யோர்தானுக்கு அருகாமையிலுள்ள பாவம் நிறைந்த சோதோம் கொமாராவை தெரிந்தெடுத்து, கூடாரம் போட்டு வாசம் பண்ணினான். சோதோமின் பாவம் பெருகியதால் தேவ கோபாக்கினை அதன்மீது இறங்கியது. இன்று நம்மிலும் அநேகர் கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்து அம்னோன் தனக்கு அழிவைத்தேடிக் கொண்டது போல் நாமும் தேடிக்கொள்ளுகிறோம்.

**கீழ்படியாமை**

கணவனுக்கு மனைவி கீழ்படிய வேண்டும். ஆனால் லோத்தின் வாழ்க்கையில் பார்க்கும்போது தேவன் சோதோமை அழிக்கப் போவதாகவும் உன்ஜீவன் தப்ப உன் மனைவி, பிள்ளைகள், எல்லோரையும் அழைத்துக் கொண்டு இந்த சம பூமி எங்கும் நில்லாமல் ஓடு என்றார். அப்படி ஓடும்போது சோதோமின் மீது அக்கினி விழும்போது திரும்பிப்பாராதே. திரும்பிப்பார்த்தால் அழிந்து போவாய் என்று கூறினார். இதை லோத்து மனைவியிடம் எச்சரித்துக் கூறிய போதும் கூட லோத்தின் வார்த்தைக்குக், கீழ்படியாமல் சோதோமை திரும்பிப்பார்த்ததின் நிமித்தம் உப்புக்தூணானாள்- இன்று நம்மில் அநேகர் கணவனின் வார்த்தைக்கு, எச்சரிப்புக்குக் கீழ்படிவதில்லை.

**மருமகன்கள்**

தெய்வ பக்தியுள்ள மருமகன்மார்களை தன் இருமகள்களுக்கும் லோத்து தெரிந்தெடுக்காமல் சோதோமின் பாவத்தில் வாழ்ந்த உலகபற்றும், சிநேகமும் கொண்ட மருமகன்மார்களை தெரிந்தெடுத்

ததான். சோதோமை தேவன் அழிக்கப்போகிறார், என் பின்னே வாருங்கள் என்று அழைத்தபோது வரமறுத்து விட்டார்கள் எனவே அக்கினிக்கு இரையானார்கள் பிள்ளைகள் விதவைகளானார்கள். இன்று நம் குடும்பங்களிலும் கூட, தெய்வ பக்தியில்லாத உலக பற்றுக்கொண்ட மருமகன் மருமகள்மார்களைத் தெரிந்தெடுப்பதால் நாம் வேதனைகளை அனுபவிக்க நேரிடுகிறது.

**தெய்வபக்தி**

லோத்து தன் பிள்ளைகளை தெய்வபக்தியில் வளர்க்காததால், இறுதியில் இருவரும் விபச்சாரிகளானார்கள் தெய்வபக்தியுள்ள மருமகன்களை, தெரிந்தெடுக்காததால் வர மறுத்ததால் அக்கினிக்கு இரையானார்கள்.

எனக்கு அருமையான தேவனுடைய பிள்ளையே இன்று நம் குடும்பத்தை சுயத்தில் கட்டினால் தெய்வத்தை நேசிக்காமல் உலகத்தின் மீது சிநேகிதம் கொண்டால், பிள்ளைகளை தெய்வ பக்தியில் வளர்க்காவிட்டால், தெய்வ பக்தியுள்ள மருமகன் மருமகள் மார்களை தெரிந்தெடுக்காவிட்டால், கணவன் மனைவிக்குள் ஒற்றுமை யில்லாவிட்டால், லோத்தின் குடுமபத்திற்கு எற்பட்ட பரிதாபமான கதிதான் நம் குடும்பத்திற்கும் நேரும். எங்கே உன் அஸ்திபாரம் கன்மலையாகிய கிறிஸ்துவா? அல்லது சுய சித்தமா?, கண்களின் இச்சையா? கிறிஸ்துவின் மீது நம் குடும்பத்தை கட்டுவோமா?

ஏலி

ஏலி சீலோவிலுள்ள தேவனுடைய ஆலயத்தில் ஆசாரிய ஊழியம் செய்து கொண்டிருந்தான். அவனுக்கு ஓப்னி, பினெகாஸ் என்று இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர்கள் பேலியாளின் மக்களாய் வளர்ந்தார்கள். தேவனுக்கு காணிக்கை படைப்பதற்கு முன்பே அதில் ஒரு பகுதியை இவர்கள் எடுத்துக்கொண்டனர். இந்த வாலிபர்களின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரியதாயிருந்தது.. ஆசரிப்பு கூடாரத்திற்கு வருகிற பெண்களோடு தவறான முறையிலும் நடந்து கொண்டார்கள். கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்கும் இவர்கள் காரணமாயிருந்தார்கள். இப்படிப்பட்ட பாவத்தை செய்யாதீர்கள். என்று ஏலி கண்டித்தும், அவன் சொல்லை அவர்கள் கேளாமற் போனார்கள். தேவனைப் பார்க்கிலும் ஏலி தன் குமாரர்களை மதித்து வந்தான். அவன்

குமாரர்கள் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற் போன பாவத்தினிமித்தம் நான் அவன் குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத் தீர்ப்பைச் செய்வேன் என்று தேவன் கூறினார். பெலிஸ்திய யுத்தத்தின் போது உடன் படிக்கை பெட்டி எதிரிகளால் பிடிக்கப்பட்டது. ஒப்னி, பினெகாசும் மாண்டார்கள். இதைக் கேள்விப்பட்ட ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுந்து பிடரி முறிந்து செத்துப் போனான்.

தேவனுடையப் பிள்ளையே ஒரு வேளை நாம் ஒரு ஊழியக்காரராக இருக்கலாம். இல்லை ஒரு விசுவாசியாக இருக்கலாம், இல்லை ஒரு சாதாரண கிறிஸ்தவனாக இருக்கலாம்: இன்று நம் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்கிறோம். இளமையிலேயே , கண்டித்து, தண்டித்து, திருத்தி வளர்க்கிறோமா அல்லது அவர்கள் இஷ்டப்படி வாழவிட்டு விடுகிறோமா? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று கூறுவார்கள். பிரம்பையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் (நீதி 23:13;14) பிள்ளையை தண்டியாமல் விடாதே. அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவை தப்பு விப்பாயே

'தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ, தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான் (நீதி 29:15) இளமையிலேயே நாம் பிள்ளைகளை கண்டித்து வளர்க்காவிட்டால் அவர்கள் வயது வந்தவர்கள், தானே திருந்துவார்கள் என்று விட்டு விடுவது தவறு, கண்டித்தால் பிள்ளைகளின் மனது புண்படுமோ, நம்மை வெறுப்பார்களோ, இல்லை தங்களுக்கு கேடு உண்டாக்கி விடுவார்களோ என்று அஞ்சி அவர்கள் செய்கிற தவறுகளைக் கண்டும் காணாதவர்கள்போல் இருப்போமானால் ஏலியின் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட கதிதான் நம் பிள்ளைகளுக்கும் ஏற்படும். ஏலிக்கு ஏற் முடிவு நமக்கும் ஏற்படலாம்.

''எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; (1 கொரி 6:12) என்று வேதம் கூறுகிறது. நம் பிள்ளைகள் எப்படிப்பட்ட உடைகளை உடுக்கவேண்டுமோ, அப்படிப்பட்ட உடைகள்தான் நாம் உடுக்க வேண்டும், எவ்வாறு அலங்கரிக்க வேண்டுமோ, அவ்வாறுதான் அலங்கரிக்கவேண்டும் கணவன் விரும்பு (ரசிக்கும்) கின்ற அளவுக்குத்தான் ஒரு மனைவியின்

உடையும் அலங்காரமும் இருக்கவேண்டுமே தவிர பிறர் பார்த்து விரும்பும் அளவுக்கு (ரசிக்கும்) இருந்தால் அதனால் தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் பிரச்சனைகளையும் உருவாக்கும். எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டும் ஆகிலும் எல்லாம் பக்தி விருத்திக்கு ஏதுவாயிராது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள் டைட்ஸ் பேண்ட் போடுவார்கள். காரணம் கரடு, முரடான, மலைப்பாங்கான முட்புதர்கள் நிறைந்த பகுதி வழியாக அவைகளை ஓட்டிச் செல்லும் போது லூசாக இருந்தால் எதிலாவது பட்டு கிழிந்து விடும், எனவே டைட்டாக இருப்பது நலம் என்று. ஆனால் நம் நாட்டு வாலிபர்கள் அந்த ஆடு மாடு மேய்க்கும் (Cow boys) பையன்களைப் போல டைட்டாக அங்கம் புடைக்கும் அளவுக்கு தைத்துப் போடுகிறார்கள். வாலிபர்கள் நாளுக்கு நாள் வளரும் இயல்புடையவர்கள். ஒரு டைட் பேண்ட் தைத்து போடுகிறார்கள். பின் ஆறுமாதத்தில் உடல் பருத்ததும் (லூஸ் பண்ணி) பிரித்து விடுகின்றனர், இன்னும் ஆறு மாதத்தில் மீண்டும் பிரித்து (loose பண்ணி) விடுகின்றனர். பின்னும் ஆறுமாதத்தில் பிரித்து விட வழியில்லாமல் அந்த பேண்ட் வீணாகி விடுகிறது, நம் கஷ்டப்பட்ட குடும்பத்தின் வருமானத்திற்கு இது தகுதியா? டைட்ஸ் போட்டுக் கொண்டு ஆலயம் வரும் வாலிபர்கள் முழங்கால் போட முடியாமல் குத்தவைத்துக் கொண்டு குரங்குபோல் உட்கார்ந்திருப்பதை பார்த்திருக்கிறேன். ஏன் தம்பி முழங்கால் போட்டால்என்ன என்றுகேட்டால் பின்பக்கம் (Back side) கிழிந்து விடும் என்கிறான், இது பக்திவிருத்திக்கு தடை. இது அவசியமா? நம் நிலைக்கு தகுதியா?

இன்றைய வாலிபர்கள் ஒரு நாள் மொட்டையடிக்கின்றனர், அடுத்த முறை குடும்பி வைக்கின்றனர், அதன்பின் Step Cutting அடுத்து ஹிப்பி (பெண்கள் போல்) முடி வளர்க்கின்றனர். ஏன் தம்பி முடியை வெட்டி அழகாகக் காணப்படலாமே என்றால் ஏன் இயேசு சுவாமி முடி வெட்டவா செய்தார், அவர் வளர்க்க வில்லையா? நான் மட்டும்தான் வளர்ப்பது தவறு என்று கேட்கிறான்.'' அப்சலோம் முடியும் சுருள் சுருளாக அழகாகக் காணப்பட்டது. எந்த முடி அவனுக்கு அழகாகத் தோன்றியதோ, அதுவே அவன் உயிர் தப்ப ஓடிவரும் போது கருவாலி மரத்தில் மாட்டிக் கொண்டது. வானத்துக்கும் பூமிக்கும் நடுவாகத் தொங்கினான், எலியை அடித்துக் கொல்வதுபோல் அவனை அடித்துக் கொன்றார்கள்.

நம் வீடுகளில் பக்திவிருத்திக்கு ஏதுவான புத்தகங்கள், பத்திரிக்கைகள் ததன் வாங்க வேண்டும், நம்பிள்ளைகள் படிக்கவேண்டும். அதை விட்டு விட்டு குமுதம், ஆனந்தவிகடன், கல்கண்டு, பேசும் படம், சினிமாக்கதிர், ராணி என்ற குப்பை பத்திரிக்கைகளை வாங்கினால் அதைப் படிக்கும் பிள்ளைகளின் அவல நிலைக் கண்டு நாம் கண்ணீர் வடிக்க வேண்டும். அவைகளினால் ஏற்படும் விளைவைக் காணும் நமக்கு ஏலியின் பரிதாப நிலை ஏற்படலாம்.

ஏலி தன் பிள்ளைகளை கண்டித்து, திருத்தி வளர்க்காததால் அவர்கள் சகாயமின்றி சடிதியில் போர்க்களத்தில் நாசமடைந்தார்கள். ஏலியும் பிடரி முறிந்து செத்தான். அவன் குடும்பத்திற்கு தேவன் செய்த நியாயத் தீர்ப்பு வேறு எந்த குடும்பத்திலும் செய்யப்பட வில்லையாம். ''உன் வம்சத்திலுள்ள யாவரும் வால வயதிலே சாவார்கள்'' என்று தேவன் கூறினார் ஆகையால் ஏலியின் குடும்பத்தில பாதி ஆயுசு வரை இருந்தவர்கள் யாரும் இல்லை.

தேவனுடைய பிள்ளையே நம் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவைப் போல வளர வேண்டும்'' அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமாய் விருத்தியடைந்தார்.''

ஏனோக்கு :-

யாரேத்தின் குமாரன் ஏனோக். இவன் முன்னூற்று அறுபத்தைந்து வருஷங்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தார். இவன் அறுபத்து ஐந்து வயதாயிருக்கும்போது மெத்துசலாவைப் பெற்றான். அதன் பின்னும் அநேக குமாரர்களையும் குமாரத்திகளையும் பெற்றான். ஏனோக்கு இவ்வாறு குடும்பமாக தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான் என்றும் தேவன் அவனை எடுத்துக் கொண்டார் என்றும் பார்க்கிறோம்.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே இன்று அநேகருடைய இதயத்தில் குடும்ப வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமாய் நடக்க முடியுமா? அவரோடு வாழ முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது நிச்சயம் குடும்ப வாழ்க்கையில் தேவனோடு வாழ முடியும்.

இன்றைய கிறிஸ்தவ தாய்மார்களிடம் நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் என்ன சொல்லுவார்கள் ஐயா எங்கே ஜெபிக்க நேரம் இருக்கிறது, எங்கே வேதம் வாசிக்க நேரம் இருக்கிறது, எங்கே ஆலயத்துக்குச் செல்ல நேரம் இருக்கிறது, எங்கே ஆவிக்குரிய கூட்டத்துக்குப் போக நேரம் இருக்கிறது என்று பற்பல கேள்விகளைக் கேட்பார்கள். காலை 6 மணிக்கு எழுந்தால் முற்றம் தெளிக்க வேண்டும், தண்ணீர் பிடிக்க வேண்டும், காபி போட வேண்டும், டிபன் செய்ய வேண்டும். பின் பிள்ளைகளை குளிப்பாட்டி, உடை உடுத்தி பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டும். அதன் பின் மதிய உணவு சமைத்து முடிக்க 1 மணி, பின் வீடு வாசல் பெருக்கி மாவு அரைத்து முடிக்க மணி நான்கு, அதன் பின் பிள்ளைகள் வந்து விடுகிறார்கள், அவர்களை படிக்க வைத்து இரவு சாப்பாடு கொடுத்து படுக்க வைக்க இரவு ஒன்பது மணி. அதன்பின் அதிக களைப்பாகிவிடுகிறது, எங்கே வேதம் வாசிக்க ஜெபிக்க நேரம் இருக்கிறது என்பார்கள்.

## அதிகாலை :-

என் அருமையான தேவனுடைய பிள்ளையே! இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பார்க்கும் போது அவர் அதிகாலை இருட்டோடே எழுந்து ஜெபிக்கச் சென்றாராம். காலையில் விடிந்து விட்டால், ஆறு மணியாகிவிட்டால், அவரைந் தேடி சீஷர்கள் வந்து விடுவார்கள். நோயாளிகள் வந்து விடுவார்கள் வசனம் கேட்க ஆட்கள் வந்து விடுவார்கள். ஆகையால் தான் அவர் அதிகாலையிலேயே, இந்த உலகம் விழித்துக் கொள்ளும் முன்பே ஜெபிக்க சென்றார். 'குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் நீயும் ஏன் காலை 4 மணி அல்லது 5 மணிக்கு எழுந்து ஜெபித்து வேதம் வாசிக்கக்கூடாது.

## தனிமையான இடம் :

இயேசு கிறிஸ்து வனாந்தரத்துக்குச் சென்று ஜெபித்தார் தனித்துப் போய் ஜெபித்தார் என்று வேதத்தில் காண்கிறோம். சீஷர்கள் நோயாளிகள், மற்றவர்கள் வந்தால் ஜெபிக்க முடியாது என்று

எண்ணித்தான் அவர் தனிமையை நாடிச் சென்று ஜெபித்தார் நீயும் என் தனிமையில் சென்று அன்னாளைப்போல உன் மன சஞ்சலத்தை அவர் சந்நிதியில் ஊற்றி ஜெபிக்கக்கூடாது.

**குடும்பமாக :-**

கொர்நேலியுவின் வாழ்க்கையை பார்க்கும்போது, அவனும், மனைவி, பிள்ளைகளுமாக சேர்ந்து ஜெபித்தார்கள். தேவ வசனம் கேட்க காத்திருந்தார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பட் பட்டார்கள். ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று காண்கிறோம். ஜான் வெஸ்லியின் வாழ்க்கையை பார்க்கும்போதும் ஜான் வெஸ்லி யும் அவர் மனைவியும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிள்ளைகளையும் அழைத்துவைத்து பேசி, ஜெபிப்பார்களாம். இன்று நாம் பிள்ளைகளை அழைத்து வைத்து என் கவலையாக இருக்கிறாய்? உன் கஷ்டம் என்ன? தேவனிடம் சொல்லுவோம், அவர் உதவி செய்வார் என்று சொல்லி ஜெபிக்கிறோமா? ஆவிக்குரிய கூட்டங்களில் நாம் குடும்பமாக கலந்து கொள்கிறோமா? ஊழியங்களில் குடும்பமாகக் கலந்து கொள்ளுகிறோமா?

'கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்களுடைய பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது''. (சங். 103 : 17) ''இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர் வதிக்கப்படுவான், கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார், நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்' (சங். 128: 4,5) என்றும் பார்க்கிறோம்.

ஏனோக்கு குடும்ப வாழ்க்கையிலும் தேவனோடு சஞ்சரித்தான். ஆகையால் அவன் மகன் மெத்துசலா தான் உலகத்திலேயே அதிக ஆயுள் உள்ள மனிதன், 969 வருஷம் உயிரோடு இருந்தான் என வேதத்தில் காண்கிறோம். தேவனுடைய பிள்ளையே நீ குடும்பமாக கர்த்தருக்கு பயந்து அவர் கற்பனைகளுக்கு கீழ்படிந்து வாழ்ந்தால் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நீடிய வாழ்வு உண்டு. முடிவில் அவரோடு வாழும் பாக்கியத்தையும் பெறுவாய். எங்கே உன் அஸ்திபாரம்? கிறிஸ்துவின் மீது உன் குடும்பம் கட்டப்பட்டு வருகிறதா? இல்லை உலகத்திலா?

## கொர்நேலியு

கொர்நேலியு செசரியா பட்டணத்தான். இவன் இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக பணியாற்றி வந்தான். தேவ பக்தியுள்ள மனுஷனாகவும் காணப்பட்டான். இவன் மிகுந்த தான தருமங்களைச் செய்து வந்தான். இவன் ஒரு நீதி மானாகவும் எண்ணப்பட்டான், யூத ஜனங்கள் எல்லோரிலும் நல்லவன் என்று சாட்சி பெற்றவன். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகிறவன் இவனுடைய ஜெபங்களும் தான தர்மங்களும் தேவசமூகத்தில் வந்து எட்டினது என்றும் பார்க்கிறோம். பிரத்தியட்சமாய் தரிசனம் கண்டான். தேவ தரிசனத்துக்கு கீழ்ப் படிந்தான். தேவ வசனம் கேட்க உறவின் முறையிலுள்ள யாவரையும், சிநேகிதர்களையும் வரவழைத்தான். பேதுருவை கண்டபோது தன்னைத்தாழ்த்தி பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான். தெய்வ வார்த்தையை கேட்கும்படி தேவ சமூகத்தில் காத்திருந்தான். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, இயேசுவை விசுவாசித்தான், தெய்வமாக ஏற்றுக்கொண்டான். விசுவாசித்த போது பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டான். பல பாஷைகளைப் பேசியும் தேவனைப் புகழ்ந்தான். உடனே கொர்நேலியுவும் அவன் குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். தேவ ஊழியர்களை சில நாட்கள் அவன் வீட்டில் தங்கும்படி வேண்டிக் கொண்டார்கள். இவன் நிமித்தம் இவன் வீட்டார் மட்டும் அல்லாமல் புறஜாதி யினரும் இரட்சிக்கப்படவும், ஞானஸ் நானம் பெறவும், பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளவும் நேர்ந்தது.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே, கொர்நேலியுவின் குடும்பத்தில் காணப்பட்ட உயரிய பண்புகள் நம்குடும்பத்திலும் காணப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் உண்டு. அந்த குடும்பத் தலைவரும், தலைவியும் கர்த்தருக்கு பயந்தவர்கள். மிகுந்த பக்தியும் ஆலய வாஞ்சை, அத்துடன் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் வாஞ்சை யும் கொண்டவர்கள். பிள்ளைகளை ஒழுக்கமாகவும் தெய்வபக்தி யிலும் வளர்த்தார்கள் இறுதியில் அவர்களுடைய மூன்று பிள்ளை களுக்குள் இருவர் M. Th. படித்து சிறந்த பொறி இயல் நிபுணர் களாக விளங்குவதுடன், சிறந்த சாட்சிகளாகவும் இருக்கும் இடங் களில் வாழ்கிறார்கள். மூன்றாவது பெண் M. B. A. படித்து இன்று பணிபுரிந்து கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு பயந்த சிறியோரையும் பெரியோரையும் தேவன் ஆசீர்வதிப்பார் (சங். 115 : 13).

தேவனுடைய பிள்ளையே நம்குடும்பமும் கொர்நேலியுவின் குடும்பத்தைப் போல தேவ பக்தியிலும், ஜெபத்திலும், தான தர்மங்கள் செய்வதிலும், நீதியிலும், தாழ்மையிலும், தேவவசனம் கேட்கும் வாஞ்சையில் வீட்டார் அனைவரும் காணப்படுவோமானால் கொர்நேலியுவின் குடும்பத்தைப் போல நம்குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய இராஜ்யத்திற்கு பாத்திரமான குடும்பமாகக் காணப்படும். தேவன் அப்பேர்பட்ட பாக்கியத்தை நமக்கு தந்து ஆசீர்வதிப்பாராக

ரூத்

எலிமெலேக்கும் அவன் மனைவி நகோமியும் பெத்லகேமை விட்டு மோவாப் தேசத்தில் போய் குடியேறினார்கள், தங்களது இரண்டு குமாரர்களுக்கும் மோவாபிய பெண்களாகிய ஓர்பாள், ரூத் என்பவர்களை மருமக்களாக தெரிந்தெடுத்தனர்- சிறிது காலத்தில் எலிமெலேக்கும் அவனது இரண்டு குமாரர்களும் மரித்துப் போனார்கள். நகோமி தன் இரண்டு மருமக்களையும் கூட்டிக் கொண்டு யூதா தேசத்துக்கும் புறப்பட்டாள், நகோமி தன் மருமக்கள் மாரிடம் ''நீங்கள் உங்கள் தாய் வீட்டிற்குப் போய், உங்களுக்கு வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே சுகமாய் வாழ்ந்திருங்கள்'' என்று சொல்லி அவர்களைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு அழுதாள் ''நாங்கள் உம்முடன்கூட வருவோமேயல்லாமல், எங்கள் தாய் வீட்டிற்கு போக மாட்டோம், என்று மறுத்து விட்டனர். இறுதியில் நகோமி அதிகம் வற்புறுத்தியதால் ஓர்பாள் அழுது தன் மாமியை முத்தமிட்டு தன் தாய் வீடு சென்றாள். ஆனால் ரூத் போக மறுத்து விட்டாள்.''நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன். நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன், என் தேவன், மரணமேயல்லாமல வேறென்றும் உம்மை விட்டு என்னை பிரிக்க முடியாது'' என்றாள். எனவே இரண்டு பேரும் பெத்லகேமுக்கு வந்தார்கள், போவாசின் கண்களில் ரூத்துக்கு தயவு கிடைத்தது. போவாஸ் ரூத்தை விவாகம் செய்து கொண்டான். தேவன் ரூத்தின் வாழ்க்கையை அதிகமாய் ஆசீர்வதித்தார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே ரூத்தின் பிற்கால வாழ்க்கை ஆசீர்வாதமாய் இருப்பதற்குறிய காரணங்கள் யாதெனில்

## உன் தேசம் என் தேசம்

நகோமியின் கணவனும் இரண்டு மகன்களும் இறந்த பின் நகோமி தன் இரண்டு மருமகள்களையும் அழைத்து நீங்கள் உங்கள் தாய் வீட்டிற்குச் சென்று வேறு திருமணம் செய்து மகிழ்ச்சியாக வாழுங்கள் என்று சொன்னபோது ஒர்பாள் சென்று விட்டாள். ஆனால் ரூத் தன் மாமியை தனிமையில் துன்பம் அனுபவிக்க விட்டுவிட, மனமற்றவளாய் அனாதையாய் விட்டு விட மனமற்றவளாய் உன் தேசம் என் தேசம்; நீர் போகும் இடம் நானும் வருவேன் என்று பற்றிப் பிடித்துக் கொண்டாள்.

அருமையான தேவனுடைய பிள்ளையே இந்தக் காலத்துப் பெண்கள் என்றால் நீ எப்படியும் போ, உன்னோடு நான் ஏன் கஷ்டப்பட வேண்டும் என் தாய் வீட்டிற்குப் போய் எப்படியும் பிழைத்துக் கொள்வேன் என்று தன் மாமன் மாமியாரை விட்டு விட்டு சென்று விடலாம். ஆனால் ரூத்தோ அப்படிச் செய்யவில்லை வயதான மாமி தனிமையில் அவதிப்படுவதை விரும்பவில்லை.

இன்றைய சமுதாயத்தில் பணக்கார குடும்பத்தில் பட்டணத்தில் பிறந்த ஒரு பெண்ணை ஏழ்மை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு படித்த மாப்பிள்ளைக்கு ஒரு கிராமத்தில் கட்டிக் கொடுத்திருக்கலாம். பட்டணத்தில் வாழ்ந்த பெண்ணுக்கு பட்டிக்காட்டில் கட்டிக் கொடுத்தது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல தோன்றலாம். சில நாள் கழித்து தனது மகளைப் பார்க்க பெற்றோர்கள் வருவார்கள். வந்ததும் மகள் தகப்பனையும் தாயையும் கட்டிப்பிடித்து அழுவாள். "இந்தப்பட்டிக்காட்டில் என்னை போய் கட்டிக் கொடுத்து விட்டீர்களே, இங்கு ஒரு கோயில் உண்டா, ஒரு குளம் உண்டா ஒரு சினிமா கொட்டகை உண்டா, ஒரு கடற்கரை உண்டா, இல்லை ஒரு பொழுது போக்குக்கு வழி உண்டா" என்று அழுததும் பெற்றோர்களின் மனது இரங்கி விடும். மகள் அழுவதை தாங்க முடியாத பெற்றோர் நீ இந்த பட்டிக்காட்டில் வாழ வேண்டாம், என்னோடு வாழ்ந்தால் போதும். வா என்று கூறி தன் ஊருக்கு அழைத்துச் சென்று விடுகின்றனர்.

அன்பான தாய்மார்களே, தகப்பன் மார்களே நம் பிள்ளைகளின் வாழ்க்கை பிரிந்து போவதற்கு, சீரழிந்து போவதற்கு காரணம் நாம் தான். திருமணம் ஆனபின் கணவன் வசிக்கும் ஊர் பட்டிக்காடாக

இருந்தாலும் பட்டணக்கரையாக இருந்தாலும் அங்குதான் வாழ வேண்டுமே தவிர நம் ஊருக்கு அழைத்து வரக் கூடாது அப்படியே வந்தால் கணவனும் மனைவியுமாகத்தான் வரவேண்டும். தனிமை யில் மகளை வர விடக் கூடாது.

திருமணமான சகோதரியே, நீயும் வாழ்க்கைப்பட்டபின் நீ உன் கணவனுடன் சேர்ந்து அவர் வாழும் இடத்தில்தான் வாழ வேண்டுமே தவிர உன் தாய் வீடு செல்லக் கூடாது. அப்படிச் சென்றால் உன் கணவனை புண் படுத்துகிறாய். மாமன், மாமியாரை புண் படுத்துகிறாய். உதாசீன படுத்துகிறாய் உன் வாழ்வை நீயே அழித்துக் கொள்ளுகிறாய். ஆகையால் திருமணமான உன் கணவர் ஊரில்தான் வசிக்கவேண்டும்.

## நீ தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்

கணவன் இறந்த பின் நகோமி உன் தாய் வீடு சென்று இன ஜனத்தோடு சேர்ந்து வாழ்ந்து கொள் என்று எவ்வளவோ கட்டாயப்படுத்தியும் கூட அவள் போக மறுத்து விட்டாள்.

தேவனுடைய பிள்ளையே இன்று செல்வமும் சீருமாக வளர்ந்த நம் பிள்ளையை ஒரு கிராமத்தில் அல்லது ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த படித்த நல்ல வேலையிலுள்ள, மாப்பிள்ளைக்கு கட்டிக் கொடுத்து விடுகிறோம். மாப்பிள்ளை வீடு ஒரு வேளை குடிசை வீடாக அல்லது சிறு வீடாக இருக்கலாம், சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்ட குடும்பமாக இருக்கலாம், இல்லை மாமியார், மாமனார் மட்டும் தனிமையில் வசிப்பதால் அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டிய குடும்பமாக இருக்கலாம். ஒரு நாள் தன் மகளைப்பார்க்க, பெற்றோர் வரலாம் உடனே மகள் தாயை கட்டிப் பிடித்துக் கொண்டு' அம்மா என்னை எப்படி வளர்த்தாய், நம் வீட்டில் எத்தனை (டாய்லட்) கழிவறை உண்டு, எத்தனை (பாத்ரூம்) குளியல் அறை உண்டு இந்த வீட்டில் ஒன்றுமில்லையே, நம் வீட்டில் ரேடியோ உண்டு, டேப்ரெக்கார்டர் உண்டு, T. V. உண்டு, இந்த வீட்டில் பொழுது போக்க என்ன இருக்கிறது. எப்படி எல்லாம் எனக்கு மூட்டையும் பாலும் கொடுத்து ஊட்டி வளர்த்தீர்கள், இந்த வீட்டில் வாரத்தில் மூன்று நாள் பழைய சோறு, கஞ்சிதான் என்னைக் இப்ப டியா கட்டிக் கொடுத்தீர்கள்'' என்று மகள் அழுததும் தாய் தந்தை

யின் உள்ளம் உடைந்து விடும், "இப்படியா மகளே நீ கஷ்டப் படுகிறாய், இத்தனை பெரிய வீடு உனக்கில்லாமல் எனக்கு இருந்து என்ன பயன், நீ என்னோடு வந்து விடு மகளே என்று அழைத்து வந்து விடுகிறோம். இது முற்றிலும் தவறு. திருமணம் செய்து கொடுத்த பின் கணவன் வீட்டில் வசதி இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி, நன்றாக சாப்பிட்டாலும் சரி, கஞ்சும், தண்ணியும், ரசமும் சோறும் சாப்பிட்டாலும் சரி அவள் கணவன் வீட்டில்தான் இருக்கவேண்டுமே தவிர பெற்றோர் வீட்டிற்கு வரவிடவும் கூடாது. அவர்களும் வரக் கூடாது. ஒரு வேளை கணவன் ஒரு குடிகாரனாக அல்லது ஒரு விபச்சாரக் காரனாக அல்லது ஒரு சூதாட்டக்காரனாக இருக்கலாம். எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் கால்மாட்டில் கிடந்து, ஜெபத்தாலும், கண்ணீராலும், நம் நடத்தையாலும் தான் அவர்களை நல்லவர்களாக மாற்றவேண்டுமே தவிர, அவர்கள் பொல்லாதவர்கள் என்று விட்டு விட்டு வந்துவிட்டால், அவர்களை திருத்துவது யார், கடவுளிடம் வழி நடத்துவது யார், அடித்தாலும் திட்டினாலும் என்ன பாடு படுத்தினாலும் அவன் காலடியில் கிடந்து சாவதுதான் பெண்மைக்கும் தியாகத்துக்கும் அழகு. உன் கண்ணீராலும் ஜெபத்தாலும் தான் அவனை திருத்த வேண்டும்.

பெற்றோர்களும் பிள்ளைகளை நம் வீட்டிற்கு அழைத்து வரக் கூடாது, இல்லை வர அனுமதிக்கக் கூடாது, மனைவியும் கணவனை விட்டு, தாய் வீடு வருவது தன் வாழ்வை தானே அழித்துக் கொள்வது போலாகும். நாட்கள் செல்ல செல்ல வைராக்கியம் அதிகரிக்கும். அதன் பின் கணவன் மனைவி இணைவது கடினம் எனவே மனைவி கணவன் வீட்டில் தான் வாழவேண்டும்.

**உன் ஜனம் என் ஜனம்**

ரூத் தன் தன் மாமியிடம் "உன் ஜனம் என் ஜனம் என்று கூறுகிறாள்." இன்று நம் பிள்ளைகளை திருமணம் செய்து கொடுத்து விட்டால் நம் பிள்ளைகளின் குடும்பம் கணவனுடைய குடும்பமாக மாறவேண்டும். கணவன் வீட்டில் போய் இருந்து கொண்டு என் குடும்பம் படித்த குடும்பம், உயர்ந்த குடும்பம், பணக்கார குடும்பம் என்று சொல்லி பெருமைப் படுத்தி கணவன் வீட்டாரை குறைத்துக் கூறி மன நோக வைத்தல் கூடாது. திருமணமான பின் கணவனுடைய குடும்பம் மனைவியின் குடும்பமாகவும், மனைவியின் குடும்பம்

கணவனின் குடும்பமாகவும் மாறவேண்டும் அப்போதுதான் அன்பு ஐக்கியம் இருக்க முடியும். தெய்வ பிரசன்னம் இருக்க முடியும் மாமனும் மாமியும் தன் தாயாக வேண்டும், உடன் பிறந்த சகோதர சகோதரிகள் தன் உடன் பிறப்புகளாக மாறவேண்டும்.

இன்று அநேக கிறிஸ்தவக் குடும்பங்களிலும் கூட திருமணம் செய்து பிள்ளைகளை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பும்போது "மகளே உன் மாமியார் குடுமி உன் கையில் இருக்கவேண்டும். உன் சம்பந்தமார்களை விட்டிற்குள்விடாதே, நீ தான் அந்த விட்டிற்கு ராணியாக இருக்கவேண்டும் என்று சொல்லி அனுப்புகிறோம். இல்லை உன் கணவனை மெதுவாக நம் வீட்டுக்கு அழைத்து வந்து விடு என்று குடும்பத்தைப்பிரிக்க வழிகூறி அனுப்புகிறோம்.

என் அருமையான பெற்றோரே, நாம் இப்படி மற்ற குடும்பங்களை பிரிக்க வழிகூறி நம் பிள்ளைகளை அடுத்த வீட்டுக்கு அனுப்பலாமா? இதே போல் உன் வீட்டிற்கு வரும் மருமகளிடமும் அவள் தாய் சொல்லி அனுப்பி உன் குடும்பத்தில் தீராத பிரச்சனை, வேதனை பிரிவினை உண்டாகுமானால் உனக்கு எப்படி இருக்கும். எனவே துர் ஆலோசனை கொடுத்து பிள்ளைகளை அனுப்பக்கூடாது.

அதற்கு பதில். இனி உன் மாமாவும் மாமியும் தான் உனக்கு தாய் தந்தை, அவர் உடன் பிறந்த சகோதரனும் சகோதரியும் தான் உன் உடன் பிறப்புகள். குடும்பத்திற்கும் தெய்வத்துக்கும் புகழ்தேடி தரும் அளவு நீ அடக்க ஒடுக்கமாக நடந்து கொள். நீயும் உன் கணவனுமாக சேர்ந்துதான் எப்போதும் நம் வீட்டிற்கு வர வேண்டுமே தவிர கோபத்தில் நீ தனிமையில் வரக்கூடாது என்று கூறி அனுப்பவேண்டும்.

திருமணமாகி கணவன் வீட்டிற்கு போகும் சகோதரியே நீயும் ஒரு ஞான மணவாட்டியாகச் செல்லவேண்டும். கணவன் வீட்டை மணம் வீசச் செய்வதும் பெற்றோருக்குப் பெருமைத் தேடி தருவதும் உன் கடமை தான். அப்போதுதான் உன் குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமும். சமாதானமும் தெய்வீக பிரசன்னமும் இருக்க முடியும்.

**உன் தேவன் என் தேவன் :-**

ரூத் தன் மாமி நகோமியிடம் உன் தேவன் என் தேவன் என்கிறாள். பிரிவினைக்கு இங்கு இடமில்லை, இன்றைய உலகில் பணத்திற்காக, பொருளுக்காக, உத்தியோகத்திற்காக,

உயர்ந்த குடும்பம் என்பதற்காக திருமணம் நடைபெற்றுவிடுகிறது. பின் வழிபாட்டில் பல பிரச்சினைகள் உருவாகி இறுதியில் பிரிவினையே உண்டாகி விடுகிறது. பெரும்பாலும் குடும்ப வாழ்வில் விசுவாசியும் விசுவாசியும் இணைக்கப்படுவது நலம். விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் இணைப்பு ஏற்பட்டாலும் பல பிரச்சனைகள் உருவாகலாம்.

சில குடும்பங்களில் கணவன் விசுவாசியாக இருக்கலாம். மனைவி இரட்சிக்கப்படாத பெண்ணாக இருக்கலாம். மனைவி கணவனைப் பார்த்து ''என்னய்யா, உன்னை கட்டியதிலிருந்து ஒரு சினிமா உண்டா, பொருட்காட்சி உண்டா இல்லை, ஒரு சர்க்கஸ் உண்டா, இல்லை ஒரு உல்லாச பயணம் தான் உண்டா? எப்போது பார்த்தாலும், கோயில், கூட்டங்கள் தானா? உன்னை கட்டிக்கொண்டு நரக வேதனை தான் அனுபவிக்க வேண்டியதிருக்கிறது. என்னோடு நீயும் வா என்று கட்டாயப்படுத்தி இழுத்துச் செல்லலாம். மனைவியை திருப்திப்படுத்த கணவன் சம்மதிப்பதின் மூலம், பரிசுத்த வாழ்க்கை பாதிக்கப்படலாம். வர மறுப்பதின் மூலம் குடும்பத்தில் பிரிவினை உருவாகலாம்.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே கணவன் ஆவிக்குரிய வாழ்க்கையுல் இடறிப்போக மனைவி காரணமாகவோ அல்லது மனைவி இடறிப்போக கணவன் காரணமாகவோ இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அந்த குடும்பத்தில் அன்பு ஐக்கியம், சமாதானம், தெய்வ பிரசன்னத்தை காணமுடியாது. யோசேப்பின் மனைவி ஆஸ்நாத் ஒரு பூசாரியின் மகள் தான் ஆனால் அவள் கணவன் ஆவிக்குரிய வாழ்க்கையில் இடறிப்போக காரணமாயிருக்கவில்லை.

இன்று நம் குடும்பங்களும் ரூத்தின் குடும்பத்தைப் போல கட்டப்படவேண்டும், கணவன் வசிக்கும் இடத்தில் மனைவி. பணக்கார குடும்பமோ அல்லது ஏழ்மையான குடும்பமோ, பங்களா வாசமோ அல்லது குடிசைவாசமோ. ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஒருவருக்கொருவர் முன்னேறிச் செல்ல உதவும் மக்களாக இருந்தால் நம் குடும்பம் ரூத்தின் குடும்பத்தைப்போல ஆசீர்வதிக்கப்படும்.

ரூத் போவாசை மணந்தாள், செல்வமும், சீரும், சிறப்புமாக வாழ்ந்தாள். அவள் குடும்பத்தில் உலக இரட்சகராகிய இயேசு பாலனே பிறந்தார். நம் குடும்பமும் ரூத்தின் குடும்பத்தைப்போல ஊழியர்களை உருவாக்கும் குடும்பமாக இருக்கவேண்டும்.

# நோவா

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்றும் கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். கர்த்தர் தான் சிருஷ்டித்த மனுஷனையும், மிருகஜீவன்களையும், ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகளையும் அழிக்க சித்தம் கொண்டார். தேவனுடைய பார்வையில் நோவாவுக்கு மட்டும் கிருபை கிடைத்தது. நோவாவும் அவன் குடும்பமும் மட்டுமே ஜலப்பிரளயத்துக்குத் தப்பினர்.

இன்றைய நவீன, நவநாகரீக உலகம் எப்படி பாவத்தில் எப்படி சிக்கி சீரழிந்து கிடக்கிறதோ அப்படியே நோவாவின் காலத்திலும் உலகம் காணப்பட்டது. பெண் கொண்டும், பெண் கொடுத்தும் புசித்தும், வெறித்தும் துன்மார்க்கத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். நோவாவின் குடும்பத்திற்கு மட்டும் தேவனுடைய கண்களில் கிருபை கிடைக்கக் காரணம்

**உத்தமனும், நீதிமானுமாயிருந்தான்**

நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்கள் சீர்கெட்டவர்களும், கொடுமையினால் நிறைந்தவர்களுமாய் இருந்தார்கள் விபச்சாரம். வேசித்தனம் பெருகியிருந்தது. ஆனால் இத்தனைக்கும் இடையே நோவா மட்டும் தேவனுக்கு முன்பாக உத்தமனும் நீதிமானுமாய் காணப்பட்டான்

**விசுவாசம்**

தேவன் நோவாவைப்பார்த்து இந்த உலகத்தை நான் ஜலத்தினால் அழிக்கப்போகிறேன். இந்தபூமியில் 40 நாட்கள் மழையை உண்டு பண்ணுவேன். நீ உனக்கு ஒரு பேழையை உண்டு பண்ணு என்றார். நோவாவோ, ஏன்? எதற்காக? எப்படி என்று எந்த கேள்வியும் தேவனிடம் கேட்கத் துணியவில்லை, அப்படியே தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தான் சொன்னபடி செய்தான் என்று காண்கிறோம்.

கீழ்ப்படிதல் :-

தேவன் நோவாவைப்பார்த்து நான் இந்த பாவம் நிறைந்த உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்போகிறேன். நீயும் உன் குடும்பமும் காக்கப்படும் படிக்கு கோப்வேர் மரத்தினால் 300 முழ நீளமும் 50 முழ அகலத்திலும் முப்பது முழ உயரத்திலுமாக ஒரு பேழையை உண்டு பண்ணு உன் குடும்பமாக பேழைக்குள் பிரவேசியுங்கள் என்று சொன்னபோது நோவா, ஏன் இப்படிக் கட்டவேண்டும், ஏன் அப்படிக்கட்டக் கூடாது என்றெல்லாம் தேவனிடம் எதுவும் கேட்கவில்லை தேவன் சொன்னபடியே கீழ்படிந்து பேழையை கட்டினான். நோவாயும் அவன் குடும்பத்தினரும் தேவன் சொன்னபடியே பேழைக்குள் பிரவேசித்தனர், தேவன் சொன்னபடியே மிருகங்களையும் பறவைகளையும், மச்சங்களையும். ஊரும் பிராணிகளையும் ஜோடி, ஜோடியாக பேழைக்குள் ஏற்றினான். முற்றிலும் தேவனுக்குக் கீழ்படிந்தான்.

தெய்வபக்தி

நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என்று வேதம் சொல்லுகிறது. அவன் பிள்ளைகளையும் தெய்வ பக்தியில் வளர்த்தான் என்றும் தெய்வ பக்தியுள்ள மருமகள் மார்களை தன் மூன்று மகன்களுக்கும் தெரிந்தெடுத்தான் என்றும், ஆகையால்தான் குடும்பமாக பேழைக்குள். பிரவேசித்தார்கள் என்றும் காண்கிறோம்.

கருத்தொருமித்த குடும்பம்

தேவன் கொடுத்த கட்டளையின்படி கணவன், மனைவி, அவனுடைய மூன்று மகன்கள், மூன்று மருமகள்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே எண்ணத்தோடு கூட தேவ கட்டளையை நிறைவேற்றினார்கள். ஒருவர் மரக்கட்டையை கொண்டுவந்தால் ஒருவர் பலகையை கொண்டுவருகிறார்கள், இன்னொருவர் ஆணியைக் கொண்டுவந்தால் மற்றொருவர் சுத்தியலைக் கொண்டு வருகிறார்கள். இவ்வாறு எல்லோரும் கருத்தொருமித்து பேழையை கட்டி முடிக்கின்றனர். ஒன்றாக பேழைக்குள் பிரவேசித்தனர்?

என் அருமையான தேவனுடைய பிள்ளையே அன்று நோவாவின் காலத்தில் நடந்தது போலவே இன்றைய உலகிலும் பாவம் பெருகிவிட்டது. சூதும், விபச்சாரமும், கொலை பாதகமும் துன்மார்க்கமும் பெருகிவிட்டது இந்த பொல்லாத பாவங்களிலிருந்து நாமும், நம் குடும்பமும் விலக்கிக் காக்கப்பட வேண்டுமானால், நோவாவின் குடும்பத்தைப்போல நாமும் உத்தமமும், நீதியுமாய் நடக்க வேண்டும். தேவன் பேரிலும் அவரது வார்த்தையின் பேரிலும் விசுவாசம் வைக்க வேண்டும், தேவனுக்கும் அவரது கட்டளைகளுக்கும். வசனங்களுக்கும் கீழ்படிந்து நடக்க வேண்டும். நம்பிள்ளைகளை தெய்வ பக்தியில் வளர்க்கவேண்டும். வேதவாசிப்பிலும் ஜெபிப்பதிலும். ஆலய ஆராதனைக்கு செல்வதிலும், ஊழியம் செய்வதிலும் சிறந்து விளங்கச் செய்ய வேண்டும் நம் மகன், மகளுக்கு தெய்வ பக்தியுள்ள மருமகன், மருமகன் மார்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். பணக்காரன், படித்தவன் உயர்ந்த குலம், குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கை நிறைய சம்பாதிப்பவர்கள் என்றெல்லாம் மாப்பிள்ளை, பெண் தெரிந்தெடுக்காமல், கொஞ்சமாக படித்திருந்தாலும், சிறுவேலை செய்தாலும், குறைந்த சம்பளம் வாங்கினாலும் தெய்வபக்தியுள்ளவர்களாயும் ஏழ்மையான வாழ்விலும், கஞ்சியும், தண்ணீருமாகக் குடித்தாலும் கருத்தொருமித்து வாழும் கணவன். மனைவியாக இருக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளின் குடும்ப வாழ்க்கையும், ஆசீர்வாதமாக இருக்கும். நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். நம் குடும்பமும் நோவாவின் குடும்பத்தைப் போல தேவன் மாற்ற ஜெபிப்போமா? முயற்சியும் செய்வோம்.



LET ME BURN OUT FOR CHRIST

# தேவனுடைய இராஜ்யத்தை கட்டும் குடும்பங்கள்

## ஆபிரகாம்

கீழ்ப்படிதல்.

ஆபிரகாம் ஆரோனில் குடியிருக்கும் போது கர்த்தர் அவனை நோக்கி ''நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர் வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப் பேன், உன்னைச்சபிக்கிறவர்களைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்க ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்' என்றார். ஆபிரகாம் ஆண்டவருடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்தார். ஆபிரகாம் கானான் தேசத்திற்குச் சென்று குடியேறினர். வயது சென்ற காலத்தில் சாராளுக்குப் பிறந்த ஏக புதல்வனாகிய ஈசாக்கை தேவன் தனக்காக மோரியா மலையில் பலியிடும் படியாகக் கூறினார். ஆபிரகாமோ எந்த கசப்பும், அங்கலாய்ப் பும், முறுமுறுப்பும் இல்லாமல் மோரியா மலைக்கு அழைத்துச் சென்று பலியிட எத்தனித்தபோது தேவன் அவனைத் தடுத்து நிறுத்தினார். அப்போது தேவனுடைய தூதன் ஆபிரகாமை நோக்கி நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்த படியினால் நீ தேவ னுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். தேவனுக்கு பயப்படும் பயமும் தேவனுக்குக் கீழ்படிதலும் ஆபிரகாமிடத்தில் காணப்பட்டதால் தேவன் கொடுத்த வாக்கின் படியே ஆபிரகாமின் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போல வும் கடற்கரை மணலைப்போலவும் பலுகி பெருகப் பண்ணினார்.

## விசுவாசம்

தேவன் ஆபிரகாமை வெளியே அழைத்து, ''நீ வானத்தை அண்ணாந்து பார். நட்சத்திரங்களை எண்ண உன்னாலே

கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி பின்பு அவனை நோக்கி உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதி 15 : 5, 6) விசுவாசியின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார். மகனை பலி கொடுக்க தேவன் கூறிய போதும் பலிபீடத்தில் கிடத்தி கத்தியை ஓங்கும்போது கூட சற்றும் விசுவாசத்தில் குன்றிப் போகவில்லை. எனவேதான் ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

### ஈகை

ஆபிரகாம் விருந்தினரை உபசரிப்பதிலும், கொடுப்பதிலும் சிறந்து விளங்கினார், ஆபிரகாம் மம்ரேயின் சமபூமியில் கூடார வாசலில் உட்கார்ந்திருக்கும் போது மூன்று புருஷர்கள் எதிரில் சற்று தூரத்தில் நிற்பதைக் கண்டார். உடனே அவர்களுக்கு எதிர் கொண்டு ஓடிச் சென்று தரை மட்டும் குனிந்து அவர்களை வணங்கி அவர்களுக்கு அப்பம், வெண்ணை, பால், இறைச்சியையும் கொடுந்து அன்புடன் உபசரித்து அவர்கள் களைப்பை போக்கினான். இதிலிருந்து ஆபிரகாம் ஈகையிலும் அன்பிலும் தாழ்மையிலும், பண்பிலும், உபசரிப்பிலும் சிறந்து விளங்கினார் என்பதைக் காணலாம்.

இப்படிப்பட்ட உயர்ந்த பண்புகளை உடைய ஆபிரகாமின் மகன் ஈசாக்கு தகப்பனைப்போலவே எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினான் என்பதை நாம் காணக்கூடும்.

## ஈசாக்கு

### கீழ்ப்படிதல்

ஈசாக்கை ஆபிரகாம் பலியிடுவதற்காக மோரியா மலைக்கு அழைத்து வரும்போது தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மவுனமாக வருகிறார் நீதான் பலியிடப்போகும் ஆட்டுக்குட்டி என்று கூறி கை, கால்களைக் கட்டி பலிபீடத்தில் கிடத்திய போது கூட தேவனுடைய கட்டளைக்கும் தந்தையின் வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து மவுனமாய் இருந்தான் என்பதை நாம் இங்கு காண்கின்றோம்.

## ஜெபம்

எலியேசர் ஈசாக்குக்கு ரெபெக்காளை திருமணம் செய்து கொடுக்க அழைத்து வருகிறார். ஈசாக்கு தியானம்பண்ண போயிருந்த போது ரெபெக்காள் தூரத்தில் வருவதை காண்கிறான் என்று பார்க்கிறோம்; எனவே ஈசாக்கு எப்பொழுதும் ஜெபத்தில் தரித்திருக்கக் கூடியவன் என்பதை உணர முடிகின்றது.

### ஈகை

தகப்பனாகிய ஆபிரகாம் ஈகையிலும் உபசரிப்பதிலும் எப்படி சிறந்து விளங்கினாரோ அதேபோல் மகனும் ஈகையில் சிறந்து விளங்கினார் அபிமெலேக்கு ஈசாக்கைதன் தேசத்தை விட்டு போய் விடும்படி கூறினான். ஈசாக்கு கேராரின் பள்ளத்தாக்கில் தங்கினான், இவனுடைய வேலையாட்கள் பள்ளத்தாக்கில் வெட்டி நீரூற்றைக் கண்டார்கள். கேராரூர் மேய்ப்பர்கள் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று வாக்கு வாதம் பண்ணினார்கள். ஈசாக்கு அதை அவர்களுக்கே விட்டுக் கொடுத்தான். மீண்டும் ஒரு துரவை வெட்டினார்கள். அதையும் தங்களுடையது என்று அந்த ஊர்மக்கள் வாக்கு வாதம் செய்த போது அதையும் விட்டுக் கொடுத்து வேறு துரவு வெட்டினான். இவ்வாறு விட்டுக் கொடுப்பதில், தானம் கொடுப்பதில் மகன் ஈசாக்கும் சிறந்து விளங்கினான்.

## எலியேசர்

ஆபிரகாமின் வேலைக்காரனாகிய எலியேசரும் ஆபிரகாமைப்போல விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும், ஜெபிப்பதிலும் ஈகையிலும் சிறந்து விளங்கினான் என்று காண்கிறோம். ஆபிரகாம் எலியேசரைப்பார்த்து நீ என் தேசத்துக்கும், என் இனத்தாரிடத்திற்கும் போய் என் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் கொள்வேன் என்று சத்தியம் பண்ணிக் கொடுக்கச் சொன்னான் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தான். பிரயாணம் செய்து நாகோருடைய ஊருக்கு வந்தான், ரெபேக்காளை தெரிந்தெடுத்ததும் 'தன் தலையைகுனிந்து கர்த்தரை பணிந்து கொண்டு' ஆதி 24 : 26) கீழ்படிந்தது மட்டுமல்ல ஜெபிக்கிறவனாகவும்

காணப்பட்டான். ரெபேக்காளுக்கு வெள்ளியுடமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் கொடுத்தான். அத்துடன் அவள் தாய்க்கும் சகோதரனுக்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான். எனவே எஜமான்களைப் போல இவனும் கீழ்ப்படிதலிலும், ஈகையிலும், ஜெபிப்பதிலும் சிறந்தவனாக இருந்தான்.

ஆபிரகாம், மகன் ஈசாக்கு, இவர்கள் வேலைக்காரன் எலியேசர் யாவருமே தேவனுக்கும், பெற்றோர், எஜமானுக்கு கீழ்படிவதிலும், தேவனை விசுவாசிப்பதிலும் அன்பு, பண்பு, உபசரிப்பதிலும், ஜெபிப்பதிலும் சிறந்து விளங்கினார்கள். எனவே தான் இப்படிப்பட்ட சந்ததியில் உலகமீட்பர் அவதரித்தார் என்றும் பார்க்கிறோம்.

தேவனுடைய பிள்ளையே நம் குடும்பமும் ஆபிரகாம் குடும்பத்தைப் போல் காணப்பட வேண்டும். நம்முடைய கீழ்படிதல், ஜெபம், ஈகையின் மூலம் நம்மிடம் பணிபுரியும் பணியாட்களையும், பக்கத்து வீடுகளில், தெருக்களில், கிராமத்தில், பட்டணத்திலும் வாழும் மக்களை தேவனுக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ளுவோம். தேவனுடைய இராஜ்யத்தை கட்டும் குடும்பங்களாக நம் குடும்பம் இன்று காணப்படுகிறதா?

## சகரியா

அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் பிறந்தவர் சகரியா இவர் ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தியாகிய எலிசபெத்துவை திருமணம் செய்திருந்தார். இவர்கள் ஏரோது ராஜா யூதேயாவை ஆளும்போது வாழ்ந்து வந்தனர். இவர்கள் இருவரும் கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியேயும், நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாயும் (லூக் 1: 5, 6) ஜெபிக்கும் தம்பதிகளாகவும் இருந்தார்கள். எனவேதான் காபிரியேல் தூதன் சகரியா தூபங்காட்டும் வேளையில் அவரிடம் தோன்றி 'சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத் உனக்கு

ஒரு குமாரனைப் பெறுவாள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனுயிருப்பான், தாயின் வயற்றில் இருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளினிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக அவன் எலியாவின் ஆவியும், பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்' என்றார்,

சகரியாவும் எலிசபெத்துவும் மோசேயின் காலத்தில் தேவன் கொடுத்த பத்து கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த படியினாலும் தேவன் நியமித்திருந்த சகல சட்டதிட்டங்கள், சடங்காச்சாரங்கள் முறைமைகளின் படியும் நடந்து, தெய்வசந்நிதியிலும், உலகமக்களின் முன்பும் குற்றமற்றவர்களாய் நடந்த படியினாலும், மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் தேவனுக்கு முன்பாகவும் நீதியுள்ளவர்களாகவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாகவும் எப்போதும் ஜெபிக்கிறவர்களாகவும் காணப்பட்ட படியினாலும் தான் இப்படிப்பட்ட குடும்பத்தில் இயேசு இரட்சகரின் முன்னோடியாகிய, திருச்சபையின் முதல் இரத்தசாட்சியாகிய யோவான் ஸ்நானகன் பிறந்தார். பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பையும் கண்டித்து உணர்ந்தினார். அநேகர் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பி யோர்தான் நதியில் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பெற்றனர். இறுதியில் ஆயக்காரரும், பரிசேயரும், சதுசேயரும் போர்ச்சேவகரும் கூட மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர். இயேசுக்கிறிஸ்துவைப்பற்றியும் முன் அறிவித்தார், ஏரோது ராஜா தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை வைத்திருந்ததை, அவனது விபச்சார பாவத்தை கண்டித்தபடியினால் அவர் தலை துண்டிக்கப்பட்டு திருச்சபையின் முதல் இரத்தசாட்சியாய், அஸ்திபாரமாய் மாறினார்.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே நாமும், நம் குடும்பமும் சகரியா, எலிசபெத்துவின் குடும்பத்தைப் போல தேவனுடைய சகல கற்பனைகளின்படியேயும், நியமங்களின் படியே

யும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயும், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்து காணப்படுபவர்களாயும் யோவான் ஸ்நானகனைப்போன்ற இரத்தச்சாட்சிகளை, திருச்சபையின் வித்துக்களை, ஊழியர்களை உருவாக்கும் குடும்பங்களாய் திகழவேண்டும். அப்போதுதான் இந்த உலகில் நாம் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டி எழுப்ப முடியும். நம் குடும்பம் அவ்வாறு காணப்படுகிறதா ?

**யோசேப்பு :-**

உலகமீட்பராகிய இயேசு கிறிஸ்து இந்த மண்ணுலகில் அவதரிப்பதற்கு ஒரு குடும்பம் இந்த பாரினில் தேவைப்பட்டது. அவர் பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர், அன்புள்ளவர், இரக்கமும் மனஉருக்கமும், மிகுந்த சாந்தமும், மிகுந்த தாழ்மையும் உள்ளவர். அப்படிப்பட்ட தேவன் இந்த உலகத்தில் அவதரிக்க தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பந் தான் யோசேப்பின் குடும்பம்.

தாவீதின் வம்சத்தில் பிறந்தவர் யோசேப்பு. இவர் தேவனுக்கு முன்பும், மனுஷர்களுக்கு முன்பும் நீதிமானாகக் காணப்பட்டார். இவருக்கு திருமணத்திற்கு நியமிக்கப்பட்ட கன்னிகையாகிய மரியாள் தேவனிடத்தில் கிருபை பெற்றவளாகவும் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளாகவும், தேவனுக்கு தான் ஒரு அடிமை என்று தன்னை தாழ்த்தி முற்றிலும் ஒப்புக்கொடுத்தவளாகவும், தேவனை விசுவாசிக்கிறவளாயும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவளாகவும், எப்போதும் ஜெபிக்கிறவர்களாகவும் காணப்பட்டபடியினாலும் தான் (லூக் 1 : 27 : 48) திருச்சபையின் தலைவராகிய இயேசுக் கிறிஸ்து இந்த குடும்பத்தில் அவதரித்தார்.

**உத்தமன்**

தேவனுடைய பிள்ளையே இந்த யோசேப்பைப் போல நாமும் நீதிமான்களாக உலகத்தில் வாழவேண்டும். இந்த உலகம் நம்மைக் குறித்து இவ்வாறு சாட்சி கொடுக்குமா? நோவா தேவனுக்கு முன்பாகவும், உலகத்தின் மக்களுக்கு முன்பாகவும் நீதிமானாய் காணப்பட்ட படியினால்தான் நோவாவின் குடும்பம்

மட்டும் ஜலப்பிரளயத்தில், அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டது. யோபு தேவனுக்கு முன் உத்தமனும், சன்மார்க்கனும் பொல்லாப் புக்கு விலகுகிறவனுமாய், தேவனுக்கு முன்பாக உத்தமனாக காணப் பட்ட படியினால் தான் தேவன் அவர் குடும்பத்தைச் சுற்றிலும் வேலியடைத்து காத்தார். முன்னிலமையிலும் அவர் பின்னிலமை இரட்டத்தனையாக ஆசீர்வதித்தார். நாமும் அநீதிக்கு செவிசாய்க்காத நீதிமான்களாய் காணப்படவேண்டும் என்று தேவன விரும்புகிறார்.

**தேவக்கிருபை பெற்றவள்:-**

தேவனுடைய பிள்ளையே நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய கண்களில் கிருபை, இரக்கம் பெற்றவர்களாகக் காணப்படவேண்டும். அப்படி தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கும் போது மனிதனுடைய தயவும் இரக்கமும், அன்பும் நமக்கு தானாகவே கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், உலக ஆசீர்வாதங்களும், நித்தியத்திற்குறிய ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கும். இன்று நாமும், நம் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வரும் தேவனுடைய கிருபையை பெற்றவர்களாக காணப்படு கிறோமா ?

**ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கபட்டவள்:-**

எல்லா ஸ்திரிகளுக்குள்ளும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பெண்ணாக மரியாள் திகழ்ந்தாள். இன்று நாம் மற்றவர்கள் மத்தியில் அப்படி காணப்படுகிறோமா ? என் மருமகள் (அல்லது மருமகன்) என்று என் வீட்டிற்கு அடிஎடுத்துவைத்து வந்தாளோ அன்றே இந்த வீட்டில் ஒரு தெய்வீக தன்மை காணப்படுகிறது. வீட்டில் ஒரு சந்தோஷம், ஒரு தெய்வீக சமாதானம், ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. அவன் தொட்டதெல்லாம், செய்வதெல்லாம், ஆசீர்வாதமாக இருக்கிறது என்று சொல்லுவார்களா ? இல்லை என்று இந்த வீட்டிற்கு வந்தாளோ (வந்தாரோ) அன்றிலிருந்து இந்த குடும்பமே தரித்திரப்பட்டு விட்டது, குடும்பத்தின் நிம்மதியை அழித்து விட்டார்கள். வீட்டிற்கே ஒரு சாபத்தீடாய் போய்விட்டாள் என்று கூறுவார்களா ? நம் நிமித்தம் நம் குடும்பம் ஆசீர்வதிக்கப் படவேண்டும். ஆசீர்வாதத்தின் ஊற்றாய் விளங்கவேண்டும்.

**தேவனுக்கு அடிமை.**

தேவதூதன் மரியாளிடம் தோன்றி 'நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக, உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார். அவருடைய இராஜ்யத்திற்கு முடிவிராது. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை' என்ற போது மரியாள் 'இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது' என்றாள். தேவ சித்தத்துக்கு மரியாளைப் போல, நம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கும் போது மட்டுமே தேவன் நம்மை அவர் கரத்தில் எடுத்து அவர் நாம மகிமைக்காக இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாக பயன் படுத்த முடியும். இன்று நம் குடும்பத்தில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நம் சுய சித்தம் செயல்படுகிறதா, தேவசித்தம் செயலாற்றுகிறதா. ஏவாள், லோத்தின் மனைவி, யோனா, பிலேயாம், யூதாஸ் போன்றவர்கள் சுய சித்தத்துக்கு தங்களை அடிமைப்படுத்தியதினால் தான், தேவசித்தத்திற்கு கீழ்ப்படியாததால்தான் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் வேதனையையும் அழிவையும் தேடிக் கொண்டார்கள். நாம் இன்று தேவனுக்கு அடிமைகளாய் இருக்கிறோமா? அவர் சித்தத்திற்கு முற்றிலுமாய் ஒப்புக்கொடுத்திருக்கிறோமா?

**ஜெபம்**

மரியாள் எப்போதும் தேவனுடைய சந்நிதியில் காத்திருக்கிறவளாய் ஜெபிக்கிறவளாய் காணப்பட்டாள். இன்று நம் குடும்பத்தில் ஒவ்வொருவரும் மரியாளைப்போல வாலிப வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் தேவனோடு தொடர்பு கொண்டவர்களாய் காத்திருக்கிறவர்களாய், ஜெபிக்கிறவர்களாய் காணப்படும்போது மட்டுமே தேவனுடைய ரகசியங்களை, மேன்மைகளை அறிந்து கொள்ள முடியும், தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார், அவருடைய வல்லமையை பெற்று வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும். நம் குடும்பத்தில் ஒவ்வொருவரும் மரியாளைப் போல எப்போதும் ஜெபத்தில்தரித்திருக்க வேண்டும்.

**விசுவாசம்**

தேவ தூதன் சொன்ன வார்த்தைகளை மரியாள் அப்படியே விசுவசித்தாள். ஆகையால்தான், "விசுவசித்தவளே பாக்கியவதி" என்று கூறக்கேட்கிறோம். அதன்படியே மரியாளின் வாழ்க்கையில் நிறைவேறியதும் பார்க்கிறோம். நம் குடும்பத்திலும் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தை, வாக்குத்தத்தங்களை விசுவசிக்கின்றோமா? இயேசு சொன்னார் "உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது." நம் வாழ்க்கையிலும், குடும்பத்திலும் மரியாளுக்கு இருந்த விசுவாசம் காணப்பட வேண்டும்.

**தாழ்மை**

தேவ தூதன் மரியாளிடம் இரட்சகரின் பிறப்பைக் குறித்து அறிவித்தபோது "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை" என தாழ்த்தினாள். நம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரிடத்திலும் மரியாளிடம் காணப்பட்ட தாழ்மை காணப்படுகிறதா? "தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபையளிக்கிறார்" ஏசாயா. தேவனுக்கு முன்பாக "நான் ஒரு அசுத்த உதடுள்ள மனுஷன்" என்றும், யோபு "நான் ஒரு நீசன்" என்றும், தாவீது "நான் ஒரு உலர்ந்த சருகு" என்றும், பரிசுத்தபவுல், "நான்பாவிகளிலும் பிரதான பாவி" என்றும் தங்களை தாழ்த்தின படியால்தான் தேவனுடைய, கிருபை, இரக்கத்தைப் பெற்றார்கள். இன்று தனிப்பட்ட வாழ்விலும் நம் குடும்பத்தில் ஒவ்வொரு மக்களின் வாழ்க்கையிலும் தாழ்மை காணப்படுமானால், நம குடும்பத்தில் அன்பு, சமாதானம், சந்தோஷம், ஒற்றுமை காணப்படும். தேவனுடைய கிருபையும் இருக்கும்.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே யோசேப்பு மரியாளின் குடும்பத்தினர் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், தேவனுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்தவர்களாகவும் எப்போதும் ஜெபத்தில் தரித்திருக்கிறவர்களாகவும் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வேர் ஊன்றியவர்களாகவும், தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களாகவும், தேவனுடைய கிருபையை பெற்றவர்களாகவும் இருந்த படியால்தான், இப்படிப்பட்ட குடும்பத்தில் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். இவர் மூலமாய் மனுக்குலத்திற்கே மீட்பு உண்டாயிற்று.

என் அருமையான தேவனுடைய பிள்ளையே நம் குடும்பமும் ஆபிரகாமின் குடும்பத்தைப்போல சகரியா எலிசபெத்தின் குடும்பத்தைப்போல யோசேப்பு மரியாளின் குடும்பத்தைப்போல கிறிஸ்துவுக்காய் வாழும், ஊழியம் செய்யும், இரத்த சாட்சிகளாய் மரிக்கும், உத்தமர்களை, ஊழியர்களை பெற்றெடுக்கும், உருவாக்கும் அனுப்புகின்ற, அர்ப்பணிக்கின்ற, குடும்பங்களாக மாறும் போது மட்டுமே இந்த பரந்த உலகம் தேவனுக்கு என்று ஆதாயப்படுத்தப் படமுடியும் அவர் இராஜ்யம் இந்த உலகத்தில் நிறுவ, நிலைத்திருக்க முடியும்.

முடிவுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே" இதை வாசிக்கும் என் அன்பு உள்ளங்களே ''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா'' என்று சாலமோன் ஞானி கூறுகின்றார். இது அவர் வாழ்க்கையில் கண்டு கொண்ட உண்மை அனுபவம். இறைவன் இல்லாமல் தன் தனிப்பட்ட வாழ்க்கையை, குடும்ப வாழ்க்கையை, சமுதாய அரச வாழ்க்கையை நடத்த முடியாது என்பது.

நம் வாழ்க்கையில் இறைவன் இல்லாமல் சுய விருப்பத்தின்படி வாழ்ந்து இறைவன் இல்லாத சுய விருப்பத்தின்படி குடும்பத்தை நடத்தி, இறைவன் இல்லாமல் சமுதாயத்தில் வாழ்ந்து நாம் அடைந்த தோல்விகள், வேதனைகள், கஷ்டங்கள் நஷ்டங்கள், அவமானங்கள், நிந்தைகள் போதாதா? இனியாவது நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையில் கிறிஸ்துவுக்கு முதல் இடம் கொடுத்து, அவரையே நாம் தலைவராக, போதகராக, வைத்தியராக, பொக்கிஷதாரராக, ஆலோசகராக, பாதுகாப்பாளராக வைத்து நம் தனிப்பட்ட வாழ்க்கையை, குடும்ப வாழ்க்கையை, சமுதாய வாழ்க்கையை நடத்துவோமானால் நம்மைப்போல் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பங்கள், யாருமே இருக்க முடியாது. தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் அப்படிப்பட்ட பாக்கியத்தை தருவாராக. ஆமென்.

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை-8 916

# பொருளடக்கம்


1 இதய பூர்வமான நன்றி !!

2 முகவுரை

3 முன்னுரை

4 **உன் அஸ்திபாரம் எங்கே?**

- 1 கட்டிடம் கட்டிடும் சிற்பிகள்
- 2 கிறிஸ்தவனின் கடமை
- 3 அப்சலோம்
- 4 சாலமோன்
- 5 யூதாஸ்
- 6 யோசேப்பு
- 7 நேபுகாத்நேசார்
- 8 யோபு
- 9 தானியேல்
- 10 பரிசுத்த பவுல்

5 **குடும்பங்கள்**

- 1 ஆதாம் ஏவாள்
- 2 லோத்து
- 3 ஏலி
- 4 ஏனோக்கு
- 5 கொர்நேலியு
- 6 ரூத்
- 7 நோவா

6 **தேவனுடைய இராஜ்யத்தை கட்டுக் குடும்பங்கள்**

- 1 ஆபிரகாம்
- 2 சகரியா
- 3 யோசேப்பு

7 முடிவுரை

உங்கள் ஜெபம் தேவை!!

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கடந்த 12 ஆண்டுகளாக நான் என் சரீர பலவீனத்தின் காரணமாகவும், தேவன் என் இதயத்தில் தந்த பாரங்களை நிறைவேற்றவேண்டும் என்பதற்காகவும் தனித்து (INDEPENDENT) ஊழியம் செய்து வருகிறேன். திங்கள், செவ்வாய், புதன் போன்ற நாட்களில் பாளை மருத்துவ மனைகளில் உதவியின்றி அனாதைகளைப்போல் கிடக்கும் ஏழை நோயாளிகளைச் சந்தித்து இயேசுவின் சுகமளிக்கும் வல்லமையை எடுத்துக் கூறி ஜெபிப்பதும், தேவையுள்ளவர்களுக்கு முடிந்த அளவு சிறு, சிறு பண உதவி, பொருள் உதவி செய்தும் வருகிறேன். மது, மாத்திரை போன்ற போதை பொருட்களுக்கு அடிமைப்பட்டு விடுதலை பெற முடியாதபடி தங்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு துண்டுப் பிரதிகள் (tracs) கொடுத்து அதிலுள்ள வரும் தீமைகளை எடுத்துக் கூறி, இதிலிருந்து விடுதலை அளிப்பவர் இயேசு ஒருவர்தான் என்பதைக் குறித்து தேவனிடத்தில் வழிநடத்தி வருகிறேன். நோயாளிகளுக்காக "பயப்படாதே, கலங்காதே, நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற துண்டு பிரதியும், "மது அருந்துவது தவறு?" "உல்லாச உலகம்" என்ற துண்டு பிரதிகள் மதுவுக்கு அடிமைப் பட்டோர், போதை மாத்திரை, சினிமா, புகைப் பிடிப் போருக்காகவும், அற்புதங்களை எதிர்பார்ப்போருக்கு "உன் வாழ்வில் அற்புதம் நடைபெற வேண்டுமா?" என்ற துண்டுப் பிரதிகளும் வெளியிட்டுள்ளேன். இவைகள் தவிர தேவ அழைப்பு வரும் இடங்களுக்கு வாலிபர் கூட்டங்கள், Convention கூட்டங்கள், மிஷனெரி கூட்டங்களில் தேவ செய்தி கொடுத்தும் வருகிறேன். இவ்வூழியத்தின் தேவைகள் ஏராளம். இவை சந்திக்கப்படவும், எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

S. செல்வின் சிரோமணி